ஸ்ரீ:

# ஸ்ரீராமாநுஜன் 23

ஸ்ரீ வைஷ்ணவ ஸம்பிரதாய தத்துவங்களை யுணர்த்த
மாதந்தோறும் வெளிவரும் பத்திரிகை.

[மதராஸ் ஸத்க்ரந்த ப்ரகாசந ஸபையின் வெளியீடு]

ஆசிரியர்: ஸ்ரீ காஞ்சீ. பிரதிவாதி பயங்கரம் அண்ணங்கராசாரியர்.

10—8—50 விக்ருதிவருஷ ஆடிமீ

## ஸ்ரீராமாநுஜன் ஆறு வார்த்தை.

ஸ்ரீராமாநுஜரான ஸ்வாமி யெம்பெருமானர் திருக்கச்சிநம்பிகள் மூலமாகப் பெற்ற ஆறுவார்த்தைகள் ப்ரஸித்தமே. அவை திருக்கச்சிநம்பியாறுவார்த்தை யென்றே வழங்கிவருவன. இங்கு "ஸ்ரீராமாநுஜன் ஆறுவார்த்தை" என்று மகுடமிட்டது அந்த வார்த்தைகளைப் பற்றியல்ல. பலராமாநுஜனை கண்ணபிரானும் ராமாநுஜனென்று வழங்கப்பெற்று வருகிறானன்றோ. அவன் விஷயமான ஆறு வார்த்தைகள் என்றபடி.

கண்ணபிரான் விஷயமான வார்த்தைகள் ஆறுதானு? ஆயிரம் பதினாயிரமிராதோ? என்று சிலர் நினைக்கக்கூடும். ஆழ்வார்களின் திவ்யப்பிரபந்தங்களில் கண்ணபிரானைப்பற்றின ப்ரஸ்தாவங்களில் வார்த்தை என வருமிடங்கள் ஆறு நம்முடைய நினைவுக்கு வந்தன. அவற்றை ஸ்ரீராமாநுஜன் ஆறுவார்த்தை யென அநுஸந்தானம் செய்து கொள்ளலாமென்று தோன்றவே அது இங்கு விஜ்ஞாபிக்கப்படுகிறது.

அவ்வாறு வார்த்தைகளாவன;—

1. வதுவை வார்த்தை.
2. நெய்யுண் வார்த்தை.
3. வெண்ணெய் வார்த்தை.
4. நடந்த நல்வார்த்தை.
5. மெய்ம்மைப் பெருவார்த்தை.
6. கஞ்சன் விடுத்தானென்பதோர் வார்த்தை.

இவ்வார்த்தைகளுக்கு ஆகரம் முன்னம் காட்டிவிட்டுப் பிறகு விவரணம் செய்வோம்.

1. திருவாய்மொழி 5-10-2. * வதுவைவார்த்தையுளேறு பாய்ந்ததும்.*
2. ,, 5-10-3. * நெய்யுண்வார்த்தையுளன்னை கோல்கொள்ள.*
3. ,, 6-2-11. * ஆய்ச்சியாகிய வன்னையாலன்று வெண்ணெய் வார்த்தையுள் சீற்றமுண்டழுகூத்தவப்பன்.*

4. திருவாய்மொழி 7-5-9. * தேச மறியவோர் சாரதியாய்ச்சென்று சேனையை நாசஞ் செய்திட்டு நடந்த நல்வார்த்தை.

5. நாச்சியார் திருமொழி 11—10. *செம்மையுடைய திருவரங்கர் தாம்பணித்த மெய்ம்மைப்பெருவார்த்தை.

6. பெரியாழ்வார் திருமொழி 2-8-6. * கஞ்சன் கறுக்கொண்டு நின்மேல் கருநிறச் செம்மயிர்ப்பேயை, வஞ்சிப்பதற்கு விடுத்தானென்பதோர் வார்த்தையுமுண்டு.*

(சிறுகுறிப்பு;—ஒன்று முதல் ஐந்து வரைக்குமுள்ள பாசுரங்களிற்காணும் வார்த்தைகள் ஸாக்ஷாத்தாகக் கண்ணபிரானையே ஸம்பந்தித்தவை. இப்படிப்பட்ட ஆறுவது வார்த்தையொன்று கிடைக்க வில்லையேயென்று அடியேன் அலமந்து ஆழ்வாராசாரியர்களின் திருவடிகளைச் சிந்தித்து நின்றபோது, மேலே கண்ட ஆறுவது பாசுரத்தை [வார்த்தையை]ப் பரமகாருணிகரான ஆழ்வார் ஸ்புரிக்கச் செய்தார். அந்தப் பாசுரம் மற்ற ஐந்து பாசுரங்கள் போலல்லாமல் "என்பதோர் வார்த்தையுமுண்டு" என்று விலக்ஷணமாக அமைந்திருப்பது—அடியேனைத் தட்டியெழுப்பிக் காட்டிக் கொடுப்பதுபோலன்றோவுள்ளது. இதையும் ராமாநுஜனுறு வார்த்தைகளில் சேர்த்துக்கொள்ள என்ன தடை? தாராளமாகச் சேர்த்துக்கொள்ளாய்—என்று நியமிப்பதுபோலவே பாசுரம் அவதரித்துள்ளதேயென்று பாவியேன் னெஞ்சு நீர்ப்பண்டமாயிற்று.)—இவ்வாறு வார்த்தைகளைப்பற்றிச் சிறிது விவரணம் காட்டுகிறேன்.—

**1. வதுவை வார்த்தை.** எம்பெருமானுடைய வொரு திவ்ய மஹிஷி ஜனகசக்ரவர்த்தியின் திருமாளிகையிலே ஸீதா பிராட்டியாய் வளர்ந்தவாறுபோல, மற்றொரு திவ்ய மஹிஷி நப்பின்னைப் பிராட்டியாய் கும்பர்மகளாய் வளர்ந்துவர, ஸீதா விவாஹத்திற்கு வில்முறியைப் பந்தயமாக வைத்திருந்ததுபோல நப்பின்னை திருமணத்திற்கு எருது முறியைப் பந்தயமாக வைத்திருந்தார் அவளது திருத்தந்தையார். "எருதேழையும் நிரஸிப்பாற்கு இவளைக் கொடுக்கக் கடவோம்" என்று பிறந்த பிரஸித்தியே வதுவை வார்த்தை யெனப்படும். எருதேழையுமடர்த்துப் பின்னைதோள் மணந்தகளவும் இந்த வார்த்தையில் அநுஸந்தேயம்.

**2. நெய்யுண்வார்த்தை.** யசோதைப் பிராட்டி நெய்யைத் திரட்டிக் குறியிட்டு வைத்துப்போய்ச் சிறிதுபோது கழித்துவந்து பார்த்தாள். குறியழிந்து கிடக்கையாலே நெய் களவு போயிற்றென்றாள். அவ்வளவிலே கண்ணன் கண்ணைப்பிசையத் தொடங்கினான்; அவ்வளவிலே யசோதை 'நீராமிது செய்தீர்' என்று ஒரு கோலைக் கையிலெடுத்தாள். தாயெடுத்த கோல்தானே, இதுதான் சிறுகோல்தானே, என்ன ப்ரமாதம் நேர்ந்துவிடும்! என்று அறியிராமே தாமரைக்கண்கள் நீர்மல்க நின்றான்; * அழுகையுமஞ்சி நோக்குமந்நோக்கு மணிகொள் செஞ்சிறுவாய் நெளிப்பதுவும் தொழுகையுமானான். இந்த விசேஷம் நெய்யுண் வார்த்தையில் அநுஸந்தேயம்.

**3. வெண்ணெய் வார்த்தை.** * ஆய்ச்சியாகிய வன்னையால் அன்று வெண்ணெய் வார்த்தையுள் சீற்றமுண்டழகூத்தவப்பனார் நங்கண்ணன். ஊரிலே வெண்ணெய் களவு போயிற்றென்றொரு வார்த்தை பிறந்ததாம். 'கண்ணா! நீயா வெண்ணெய் திருடினாய்!' என்று கேட்டாராருமில்லை. ஆயினும், இக்களவு வார்த்தை நம்மையன்றி வேறொருவரையும் இலக்காகக் கொள்ளாதென்று தானே யழப்புக்கான். இவ்விடத்திற்குப் பொருத்தமாக நம்பிள்ளை ஒரு லௌகிககதையை யருளிச் செய்வர்; "மடம் மெழுகுவார் ஆர் என்ன, அச்ரோத்ரியன் என்றார்கள்; இப்பரப்பெல்லாம் என்னாலே மெழுகப்போமோ வென்றான்;

அது போலே'' என்று. அதாவது, பலர்கூடி ஒரு பெரிய மடத்திலே தங்கப் போனார்கள். அந்த மடம் அகலமும் நீளமும் அதிகமாகக் கொண்டிருக்கவே, இவ்வளவு பெரிதான இச்சத்திரத்தை நித்தியம் மெழுகி விளக்கவேணுமே, அது யார் செய்வதோ? என்று சிலர் பேசிக்கொண்டார்களாம். அதற்கு ஒருவன் பதில் சொன்னானாம் 'தங்கியுறங்கி யெழுந்து போக வந்தவுங்களுக்கு இந்த விசாரம் எதுக்கு? எவனாவொரு விதவாபுத்ரன் அந்த வேலையைச் செய்து போகிறான்' என்று. அந்தத்திரளிலே மெய்யாகவே ஒரு விதவாபுத்ரன் இருந்து அவன் காதிலே இந்த வார்த்தை விழுந்தது. 'ஐயோ! இவ்வளவு பரப்பு என்னாலே மெழுகிப் பெருக்கப்போமோ?' என்று அவன் அழத்தொடங்கினானாம். அதனாலே தன்னுடைய அவத்யத்தைத் தானே வெளியிட்டுக் கொண்டானாயிற்று. அதுபோலே, வெண்ணெய் களவு ப்ரஸங்க மாத்ரத்தில் அழுத கண்ணனும் தன்னுடைய களவைத் தானே வெளியிட்டுக் கொண்டானென்கை. இந்த விசேஷமே வெண்ணெய் வார்த்தையில் அநுஸந்தேயம்.

**4. நடந்த நல்வார்த்தை.** * தாயஞ் செறு மொருநூற்றுவர் மங்க வோரைவர்க்காய்த் தேசமறிய வோர் சாரதியாய்ச் சென்று சேனையை நாசஞ் செய்திட்டு நடந்த நல்வார்த்தை இது. பஞ்சபாண்டவர்க்குக் கையாளாயிருந்து இழிதொழில் செய்து பார்த்தஸாரதி யென்று பேர்பெற்றுத் தாழ நின்று அநிஷ்டவர்க்கங்களைக் களைந்து * க்ருத்வா பாராவதரணம் ப்ருதிவ்யா: ப்ருதுலோசந:, மோஹயித்வா ஜகத் ஸர்வம் கத: ஸ்வம் ஸ்தாநமுத்தமம் * என்கிறபடியே தன்னடிச் சோதிக்கு நடந்த நல்வார்த்தை இது. எம்பெருமான் திருநாடேற வெழுந்தருளினானென்கிற இது தீய வார்த்தையே யொழிய நல்வார்த்தையாகுமோ வென்ன வேண்டா; * களிமலர்த்துழாயலங்கல் கமழ்முடியன் கடல் ஞாலத்து அளிமிக்கான் * என்று ஆழ்வாரருளிச் செய்தபடியே எம்பெருமான் இந்நிலத்திலே வாழ மிகவும் விருப்ப முடையவனே; ஸம்ஸாரிகளாய் எதிரம்பு கோத்து நலிய நினைப்பாரும், * அவஜாநந்தி மாம் மூடா: * என்றும் * ந மாம் துஷ்க்ருதிநோ மூடா: ப்ரபத்யந்தே நராதமா:, மாயயா அபஹ்ருதஜ்ஞாநா ஆஸுரம் பாவமாச்ரிதா: * என்றும் தானே நெஞ்சாறல்படும்படி அவமானம் பண்ணுவாரும் மலிந்தபடியாலே 'இவ்விடத்தை விட்டுக் கிளம்பிப் போனால் போதும்' என்றாய்விட்டது அவன்றனக்கே. நல்லபடியாய்த் தன்னிடம் போய்ச் சேர்ந்தானே யென்று அன்பர்களும் உகக்க வேண்டியதாயிற்று. ஆகவே தன்னடிச் சோதியேற நடந்ததை நல்வார்த்தை யென்னக் குறையில்லை யென்க.

**5. மெய்ம்மைப்பெருவார்த்தை.** * செம்மையுடைய திருவரங்கர் தாம்பணித்த மெய்ம்மைப் பெருவார்த்தையாவது, * மாயனன்றைவர்தெய்வத் தேரினில் செப்பிய கீதையின் ஸாரமான * ஸர்வதர்மாநித்யாதியான சரமச்லோகமாகிற வார்த்தை. கண்ணபிரான் வார்த்தையான இதனைத் திருவரங்கர் தாம் பணித்த வார்த்தையாகச் சொல்லுவானென்னென்னில்; * வளவெழுந்தவளமாட மதுரைமாநகரந்தன்னுள் கவளமால் யானைகொன்ற கண்ணனை அரங்கமாலை * என்றும், * கொண்டல் வண்ணனைக் கோவலனை வெண்ணெயுண்டவாயனென்னுள்ளங் கவர்ந்தானை அண்டர்கோனணியரங்கன் * என்றும் கண்ணனையும் அரங்கனையும் ஒரேவ்யக்தி யாகவன்றோ உகந்திருப்பது. பெரியாழ்வார் * வெண்ணெய் விழுங்கி வெறுங்கலத்தை * என்கிற பதிகம் முழுவதாலும் கண்ணபிரான் செய்த தீம்புகளைச் சொல்லிவிட்டு நிகமனப்பாசுரத்தில் * வண்டுகளித்திரைக்கும்பொழில் சூழ் வருபுனற்காவிரித் தென்னரங்கன் பண்டவன் செய்த கிரீடை யெல்லாம் * என்று ஸ்ரீரங்கநாதனே செய்த செயலாகவன்றோ தலைக்கட்டிற்று. ஆண்டாள் தானும் * கண்ணாலங்கோடித்துக் கன்னிதன்னைக் கைப்பிடிப்பான் திண்ணார்ந்திருந்த சிசுபாலன் தேசழிந்து அண்ணாந்திருக்கவே ஆங்கவளைக் கைப்பிடித்த

**பெண்ணுளன் பேணுமூர் பேருமரங்கமே** * என்றிறே அப்பாசுரத்தின் கீழ்ப்பாசுரத்திலே சொல்லிவைத்தது. ஆகவே திருவரங்கர்தாம் பணித்த மெய்ம்மைப் பெருவார்த்தை கண்ணன் வார்த்தையேயாம். " அநாதிகாலம் பாபங்களைக்கண்டு நீபட்டபாட்டை அவைதான் படும்படி பண்ணுகிறேன்; இனி உன்கையிலுமுன்னைக் காட்டித்தாரேன்; என்னுடம்பிலழுக்கை நானே போக்கிக் கொள்ளேனோ? பாபங்களை நான் பொறுத்துப் புண்யமென்று நினைப்பிடாநிற்க நீ சோகிக்கக் கடவையோ ?" என்றருளிச் செய்த மெய்ம்மைப் பெருவார்த்தையிது.

**6. கஞ்சன் விடுத்தானென்பதோர் வார்த்தை.** தன்னைக் கொல்லப்பிறந்த கண்ணனென்னும் கருந்தெய்வம் * சீதக்கடலுள்ளமுதன்னதேவகி கோதைக்குழலாளசோதைக்குப்போத்தந்த பேதைக்குழவியாய்த் திருவாய்ப்பாடியிலே யொளித்துவளர்கின்ற தென்றறிந்த கம்ஸன் *ஸ தஸ்மிந் நாஸுரஸங்கேதாந் தேந ஸஹாஸ்ய ந்ருசம்ஸஸ்ய தா: ஆஸுரவ்யாபார ஸம்ஸ்ரயஸ்தம் நடீஸ்தம் நாயகிஹாரமுக்தம்—ஸ துர்தமாந் ஆஸுர ஸத்வபேதாந் நேதா ஸமாஹூய ந்ருசம்ஸசேதா:, ப்ரஸ்தாபயாமாஸ பரைரத்ருஷ்யம் நந்தாஸ்பதம் நாதவிஹாரகுப்தம் * என்று யாதவாப்யுதயத்திற் பணித்தபடியே கண்ணனை நலியும்பொருட்டுப் பலபல ஆஸுரப்ரக்ருதிகளை ஏவினனென்றும் அவற்றிலே ஒன்று பூதனையென்னும் பேய்ச்சியாய் பெற்றதாய்போல் வஞ்சக வேஷத்துடன் வந்து நஞ்சுதீற்றிய முலையை யுண்ணக்கொடுத்து முடிந்துபோனகதை ஸுப்ரஸித்தம். அந்தப்பூதனை வந்து மாண்டுபோய் எத்தனையோநாள் கடந்த பிறகு "கஞ்சன் கறுக்கொண்டு நின்மேல் கருநிறச் செம்மயிர்ப்பேயை வஞ்சிப்பதற்கு விடுத்தானென்பதோர் வார்த்தையுமுண்டு" என்று யசோதை சொல்லுவதாக ஆழ்வாரருளிச் செய்ததானது விரோதிநிரஸநவார்த்தையை அநுஸந்தித்தபடியாமத்தனை. ஆக இவ்வாறு வார்த்தையும் ரஸிகர்களுக்கு நித்யாநுஸந்தேயம்.

---

# முக்கிய விஞ்ஞாபநம்.

பிள்ளை லோகாசார்யர் அருளிச்செய்த ஸ்ரீ வசநபூஷணம், தத்வத்ரயம், திருமந்த்ரார்த்தமென்கிற முமுக்ஷுப்படி—ஆகிய இம்மூன்று ரஹஸ்யங்களுக்கும், இவரது திருத்தம்பியாரான அழகிய மணவாளப்பெருமாள் நாயனர் அருளிச்செய்த ஆசார்யஹ்ருதயத்திற்கும் மணவாளமாமுனிகள் அருளிச்செய்தருளின அமுதிலுமாற்றவினிய வியாக்கியானங்கள் மிகச்சிறந்த முறையில் ஒரே சம்புடமாகத் தெலுங்கு லிபியில் அச்சிடப்பட்டுள்ளன. மிகவுயர்ந்த கித்தான் பயிண்டுடன் விலை 7 ரூ. இவ்வண்ணமாகவே இவற்றைத் தமிழ் லிபியிலும் அச்சிடத்தொடங்கியிருப்பதில் ஆசார்ய ஹ்ருதய வியாக்கியான முத்ரணம் முடியுந்தருவாயிலிருக்கின்றது. அது முடிந்தபின் மற்ற ரஹஸ்யங்களின் வியாக்கியானமும் [தமிழ் லிபியிலேயே] அச்சிடப்படும்.

ஸத்கிரந்தப்ரகாசந ஸபையின் மூன்றாவது வருஷத்து வெளியீடாக இதுவரை நான்கு புத்தகங்கள் வெளியிடப்பட்டிருக்கின்றனவென்பது அன்பர்கள் அறிந்ததே. ஐந்தாவது புத்தகம் இம்மாதத்தில் வெளியிடப்படுகின்றது; அதாவது—திருவாய்மொழி மூன்றாவது பத்துக்கு திவ்யார்த்ததீபிகையுரை.

பகவத்விஷயம் ஈடுமுப்பத்தாறுயிரப்படி—முதற்பத்து இரண்டாம்பத்து ஆறும்பத்து ஆகிய மூன்று பத்துக்களே இதுவரையில் வெளியிடப்பட்டிருக்கின்றன. ஏழாம்பத்து, எட்டாம்பத்து, ஒன்பதாம்பத்து ஆகிய இவை—மூன்று அச்சுக்கூடங்களில் அச்சிடப்பட்டு வருகின்றன. இவற்றில் ஒன்பதாம்பத்து முடியுந்தருவாயிலிருக்கின்றது. விரைவில் வெளியிடப்படும்.

# இதிஹாஸ புராண விசேஷார்த்த வினாவிடை.

ஆசார்யஹ்ருதயத்தில் "பரதாக்ரூரமாருதிகளைப் பரிஷ்வங்கித்த" என்றுள்ளவிடத்தில் "மாருதி பரதாக்ரூரர்களைப் பரிஷ்வங்கித்த" என்றிருக்கவேண்டுவதன்றோ முறைமை; மாருதிக்குக் கொடுத்தருளின பரிஷ்வங்கம் முன்னே; பரதாழ்வானுக்குக் கொடுத்தருளின பரிஷ்வங்கம் அதற்குப்பிறகு; அக்ரூரனுக் களித்தருளின பரிஷ்வங்கம் அதற்கும்பிறகு—என்றிப்படி க்ரமமிருக்க, பரதாக்ரூரமாருதிகளையென்று முறைமாறாடியருளிச் செய்ததன் காரணத்தை மஹான்கள் ஆராய்ந்து தெரிவிக்கவேணுமென்று சென்றவிதழில் விஜ்ஞாபித்திருந்தேன். அருள் கூர்ந்து ஒருவரும் தெரிவிக்கவில்லை. "அக்காரணத்தை நீயே விவரிப்பது நலம்; அதுதான் ரஸிகர்களுக்கு நல்லுணவாகும்" என்று உயரன்பரான உயிர்நண்பர் சிலர் தெரிவித்தார்கள். ஆகவே விஜ்ஞாபித்துக்கொள்ளுகிறேன்.

கடைகளில் சரக்குகளை யெடுத்துக்காட்டும் விதம் இரண்டு வகையாகக் காணப்படுகிறது; உயர்ந்த சரக்குகளை முன்னே எடுத்துக் காட்டிவிட்டு 'இதற்கு இவர் அதிகாரியல்லர்' என்று தெரிந்துகொண்டு பிறகு கீழான சரக்குகளை யெடுத்துக்காட்டுவது சிலருடைய க்ரமம். ஸாதாரணமான சரக்குகளை முன்னே யெடுத்துக் காட்டிவிட்டு அதில் அபர்யாப்தி கண்டு உயர்ந்த சரக்குகளைப் பிறகு எடுத்துக்காட்டுவது சிலருடைய க்ரமம். இவ்விரண்டு க்ரமங்களும் நம் ஆசார்யர்களின் திவ்யக்ரந்தங்களிலுமுண்டு. உத்தரோத்தரம் தாழ்வானவற்றைச் சொல்லிப் போருகிற விடங்களுமுண்டு; உத்தரோத்தரம் மேலானவற்றைச் சொல்லிப் போருமிடங்களுமுண்டு. ஆசார்யஹ்ருதயத்திலேயே மூன்றாம் ப்ரகரணத்திலுள்ள "நயாசலன் மெய்ந்நாவன் நாதயாமுனர்போல்வாரை" என்கிற ஸ்ரீஸூக்தியை யெடுத்துக்கொள்வோம். இங்கு நயாசலனென்பவர் * நளிர்ந்த சீலன் நயாசலனபிமானதுங்கனை நாடொறும் தெளிந்த செல்வனைச் சேவகங்கொண்ட செங்கண்மால் திருக்கோட்டியூர் * என்று பெரியாழ்வார் திருமொழியிலும், * அல்வழக்கொன்றுமில்லா அணிகோட்டியர்கோனபிமானதுங்கன் செல்வனைப்போல * என்று திருப்பல்லாண்டிலும் கொண்டாடப்பட்ட ஸர்வோத்தமர். அவரை முன்னே சொல்லி அவர்க்கு சேஷபூதரான * மெய்ந்நாவன் மெய்யடியான் விட்டுசித்தனென்னும் பெரியாழ்வாரைப் பின்னே சொல்லி, அவர்க்கும் சேஷபூதரான நாதமுனிகளை அவர்க்குப் பின்னே சொல்லி, அவர்க்கும் சேஷபூதரான யமுனைத்துறைவரை முடிவில் சொல்லியிருக்கிறவிது முதல் வகைக்கு த்ருஷ்டாந்தம். "பரதாக்ரூரமாருதிகளை" என்கிற ப்ரக்ருதவாக்யம் இரண்டாம் வகைக்கு த்ருஷ்டாந்தம். பகவத் பரிஷ்வங்க பாத்ரபூதர்களில் பரதாழ்வானைக் காட்டிலும் அக்ரூரர் மேம்பட்டவர்; அக்ரூரரைக் காட்டிலும் மாருதி மேம்பட்டவர்; எங்ஙனேயென்னில்; உடன் பிறந்தவனும் சிரபரிசிதனுமான பரதனை யணைத்துக்கொண்டாரென்றால் இதிலென்ன வியப்பு! கம்ஸன்சோறுண்டுவளர்ந்தவனாய் ஒருநாளும் கண்டறியாதவனாய் மிகப்புல்லியனான அக்ரூரனைத் தழுவிக்கொண்டது அதைவிட ஆச்சரியமானது. இனி, மநுஷ்யன் மநுஷ்யனை யணைத்துக்கொண்டானென்றால் இதில் வியப்பேயில்லை; * வாதமாமகன் மற்கடம் விலங்கு மற்றோர்சாதி* (பெரியதிருமொழி 5—8—2) என்னப்பட்ட ஒரு குரங்கின் மயிரடர்ந்த உடம்பை வெண்ணெய்த்திருமேனியிலணைத்துக் கொண்டார் பெருமாள் என்றால் இதனின் மிக்க வியப்பு இல்லையே. இதைப் பார்க்கில் பரதனுக்கும் அக்ரூரனுக்குமளித்த பரிஷ்வங்கம் ஸாதாரணகரஸ்பர்சம் என்னத்தகுமேயொழிய பரிஷ்வங்கமென்று சொல்லத்தகாதிறே: ஆகவிப்படி உத்தரோத்தரம் மேம்பாடு காண்கிறது. இது வ்யக்திகளில் மாத்திரமன்றிக்கே இந்த வ்யக்திகளைப்பற்றின பரிஷ்வங்கப்ரதிபாதக ப்ரமாண வசனங்களிலும் நெடுவாசி காட்டப்பட்டுள்ளது. எங்ஙனே யென்னில்;

பரதாழ்வானைப் பரிஷ்வங்கித்தபடியைச் சொல்லுகிற ஸ்ரீராமாயண ச்லோகத்தில் * அங்கே பரதமாரோப்ய முதித: பரிஷஸ்வஜே என்று வெறும் பரிஷ்வங்கமே சொல்லப்பட்டது. அக்ரூரனைப் பரிஷ்வங்கித்தபடியைச் சொன்ன ஸ்ரீ விஷ்ணுபுராண ச்லோகத்திலோ வென்னில் * ஸம்ஸ்ப்ருச்ய ஆக்ருஷ்ய ச ப்ரீத்யா ஸுகாடம் பரிஷஸ்வஜே * என்று வசந வ்யக்தியுள்ளது. பரத பரிஷ்வங்கத்திற்காட்டிலும் இது ஆயிரமடங்கு சிறந்ததென்பது சப்த ஸந்நிவேசத்தில் ஸுவ்யக்தமாகும்.

இனி மாருதி பரிஷ்வங்கத்தைச் சொல்லும் ஸ்ரீ ராமாயண ச்லோகமோ வென்னில் ஸர்வோத்துங்கமாக அமைந்துள்ளது. கீழே இருவருடைய பரிஷ்வங்கத்தையும் கதை சொல்லுகிற மஹர்ஷிகள் சொல்லிவைத்தார்களத்தனை. மாருதி பரிஷ்வங்கம் அப்படிப்பட்ட தன்று; * ப்ரீதிஹ்ருஷ்டாங்கோ ராமஸ் தம் பரிஷஸ்வஜே * என்று ரிஷி சொல்வது கிடக்க, உகந்து தழுவா நின்ற பெருமாள் தாமே 'இந்தப் பரிஷ்வங்கத்தின் பெருமை எப்படிப் பட்டது தெரியுமா?' என்று சாலவும் கொண்டாடிப் பேசி இது இவர்க்கு ஸர்வஸ்வதானம் பண்ணினபடி என்கிறார். [* ஏஷ ஸர்வஸ்வபூதஸ் து பரிஷ்வங்கோ ஹநூமத: *] என்று பெருமாளே கொண்டாடிக் கூறுகிறார். இதிலுள்ள துகாரமானது—அவதாரங்களில் பக்தர்களுக்கு நான்கொடுக்கிற பரிஷ்வங்கப் பரிசுகளெல்லாவற்றிற்காட்டிலும் இது நெடுவாசி பெற்றது என்னுமிடத்தைக் காட்டி நிற்கும். (து-காரோ வ்யாவர்த்தக: என்பது சாஸ்த்ரஜ்ஞமர்யாதை.) [ஸர்வஸ்வபூத:] உலகில் ஒருவன் ஒருவனுக்கு ஒரு வஸ்து கொடுத்தால் அவன் அந்த வொரு வஸ்துவோடே த்ருப்தி பெற்று நிற்பதில்லை; உண்ணுஞ்சோறும் பருகும் நீரும் தின்னும் வெற்றிலையும் உடுக்குங் கூறையும் என்று கொடுக்கவேண்டுமவை பல பலவாயிருக்கும்; அன்ன பானாதிகளைத் தனித்தனியே கொடுக்கையன்றிக்கே நிதியான பொற்கிழியைத் தந்து விட்டால் அது கொண்டு எல்லாவபேக்ஷிதங்களையும் வேண்டும்போது பெற்றுக் களிப்பர்கள் ஸம்ஸாரிகள். திருவடியோ அன்னபானாதிகளிலும் நவநிதிகளிலும் விருப்பற்று வெறுப் புற்றவர். எதையும் த்ருணமாக நினைப்பவர். பெருமாளுடைய திருமேனி யொன்று தவிர மற்று எதையும் விரும்பகில்லாத அவர்க்கு எதைக்கொடுத்தால் எல்லாங்கொடுத்ததாகுமென்று தீரச் சிந்தித்த பெருமாள் * ஏஷ ஸர்வஸ்வபூதஸ் து * என்று சொல்லித் திருமேனியைக் கொடுத்தவிது ஒப்புயர்வற்றதானமாகும். இந்த ப்ரகரணத்திலே "அம்ருதாசிக்குப் புல்லிட வொண்ணாதிறே" என்று நம்பிள்ளையருளிச் செய்வராம். இப்படிப்பட்ட சீரிய பரிஷ்வங்கம் திருவடி பக்கலில் தான் மிக மிக சிறம்பெற்றதென்றுகொண்டு உத்தரோத்தர முத்கர்ஷ முறையில் * பரதாக்ரூர மாருதிகளைப் பரிஷ்வங்கித்த * என்று ஆசார்ய ஹ்ருதய ஸூக்தி அமைந்தது.

---

# கீழையகம் மேலையகம் வடக்கிலகம்.

ஆழ்வார்களின் திவ்ய ஸூக்திகளில் கண்ணபிரானுடைய குறும்புகளைப் பேசும் பிரகரணங்களில், அப்பெருமான் கீழையகத்தில் செய்த தீம்புகளும் மேலையகத்தில் செய்த தீம்புகளும் வடக்கிலகத்தில் செய்த தீம்புகளும் பேசப் பட்டிருக்கின்றன. அவற்றை உற்று நோக்குமிடத்துத் தோன்றும் விசேஷார்த்தத்தை நம் பூருவாசாரியர்கள் ஸூக்ஷ்மமாகத் தெரிவித்தருளியுள்ளார்கள். அஃது இங்கு விவரிக்கப்படுகிறது.

## கீழையகத்துத் தீம்பு.

பெருமாள் திருமொழியில் (6—2.) * கெண்டையொண்கண்மடவாளொருத்தி கீழை யகத்துத் தயிர் கடையக் கண்டு, ஒல்லைநானும் கடைவனென்று கள்ளவிழியை விழித்துப்புக்கு,

வண்டமர் பூங்குழல் தாழ்ந்துலாவ வாண்முகம் வேர்ப்பச் செவ்வாய்துடிப்பத், தண்டயிர் நீ கடைந்திட்ட வண்ணம் தாமோதரா மெய்யறிவன் நானே * என்கிற பாசுரமுள்ளது. ஒரு கோபிகையின் வார்த்தையிது. தன்னகத்திற்குக் கீழண்டையகத்திலிருப்பாளொரு பெண் பிள்ளையானவள் தனியே யிருந்து தயிர் கடையா நிற்கையில் அதுகண்ட நீ தனியாகத் தயிர் கடைந்தால் ஒரு காலும் வெண்ணெய் புறப்படமாட்டாது, நானும் ஒரு தலைபற்றிக் கடைந் தால் தான் விரைவில் வெண்ணெய்காணும்' என்று வாயாற்சொல்லி உள்ளே வேற்று நினைவு இருக்கும்படி தோன்றத் திருட்டுவிழி விழித்து, மயிர்முடியவிழ்ந்து அலையும் படியாகவும், தாமரையிலே முத்துப் படிந்தாற்போலே ஒளி பொருந்திய முகம் வேர்க்கும்படியாகவும், அதரம் துடிக்கும்படியாகவும் அவளோடேகூடி நீ தயிர் கடைந்த வரலாறு எனக்குத் தெரியு மப்பா! என்று கண்ணபிரானை நோக்கி ஒரு ஆய்ச்சி சொல்லுவதாக இப்பாசுரமுள்ளது.

இப்படி குலசேகராழ்வார் அருளிச் செய்திருப்பதுபோலவே திருமங்கையாழ்வாரும் பெரிய திருமொழியில் (10—7—1.) * நானுமுரைத்திலேன் நந்தன் பணித்திலன், நங்கைகாள் நானென் செய்கேன், தானுமோர்கன்னியும் கீழையகத்துத் தயிர்கடைகின்றான்போலும் * என் றருளிச் செய்கிறார். கண்ணபிரான் செய்த சில தீம்புகளை ஆய்ச்சியர் யசோதைப் பிராட்டி பக்கலிலே வந்து முறையிட, அதற்கு அவ்யசோதை ஆய்ச்சியரை நோக்கிக் கூறும் பாசுரமாய் அமைக்கப்பட்டதிது. இதில், கீழண்டையகத்தில் ஓர் இளம் பெண்ணுடனே யுட்கார்ந்து அவளுந்தானுமாகக் கண்ணன் தயிர் கடைந்ததாக யசோதை கூறுகின்றாள். ஆக இரண்டு ஆழ்வார்களும் தயிர் கடையுங் காரியத்தைக் கீழண்டையகத்தில் நடந்த காரியமாகவே சொல்லி யிருப்பது குறிக்கொள்ளத்தக்கது. இது கர்மயோகத்தைச் சொன்னபடி. தயிர் கடைவ தென்கிற க்ரியாகலாபம் கர்மயோகத்தை நினைப்பூட்டும். ஆகவே ஸம்ப்ரதாயத்தில் கீழையக மென்பது கர்மயோகத்திற்கிட்டவொரு ஸங்கேதமாகும். இனி, மேலையகம் செல்வோம்.

## மேலையகத்துச் செய்தி.

பெரியாழ்வார் திருமொழியில் (2—9—5.) * பாலைக்கறந்தடுப்பேற வைத்துப் பல்வளையாளென் மகளிருப்ப, மேலையகத்தே நெருப்புவேண்டிச்சென்று இறைப்பொழுதங்கே பேசி நின்றேன் * என்று ஓர் ஆய்மகள் யசோதை பக்கலில் முறையிடுவதாகப் பாசுர முள்ளது. இதில், மேலண்டையகத்தில் நெருப்புவேண்டிச் சென்றதாகச் சொல்லப்படுகிறது. பெரியாழ்வார் இப்படியருளிச் செய்தது போலத் திருமங்கையாழ்வார் பெரிய திருமொழியில் (10—7—2.) * காலையெழுந்து கடைந்தவிம் மோர்விற்கப் போகின்றேன் கண்டே போனேன், மாலை நறுங்குஞ்சி நந்தன்மகனல்லால் மற்று வந்தாருமில்லை, மேலையகத்து நங்காய் வந்துகாண்மின்கள் * என்கிறார். மேலண்டையகத்து விஷயமான இவ்விரண்டு பாசுரங்களை யும் நோக்குமிடத்து ஜ்ஞானயோகம் நினைவுக்கு வரும். * மேலையகத்தே நெருப்புவேண்டி* என்றவிது * ஜ்ஞாநாக்நிதக்த கர்மாணம் * (கீதை 4—19) என்கிற ச்லோகத்தையும், * ஜ்ஞா நாக்நிஸ் ஸர்வகர்மாணி பஸ்மஸாத்குருதே * (கீதை 4-37.) என்கிற ச்லோகத்தையும் நினைப் பூட்டியே நிற்கும். * மேலையகத்து நங்காய் வந்து காண்மின்கள் * என்ற பாசுரமும் காண் கையைச் சொல்லுகையாலே ஜ்ஞானத்தையே நினைப்பூட்டும். ஆக, மேலையகமென்பது ஜ்ஞா னயோகத்திற்கு ஸம்ப்ரதாய ஸங்கேதமென்றுகொள்ளத்தகும். இனி, வடக்கிலகம் புகுவோம்.

## வடக்கிலகத்து வ்ருத்தாந்தம்.

பெரியாழ்வார் திருமொழியில் (3-1-2) * பொன்போல் மஞ்சனமாட்டி......, வடக்கி லகம் புக்கிருந்து மின்போல் நுண்ணிடையாளொரு கன்னியை வேற்றுருவம் செய்துவைத்த அன்பாவுன்னை யறிந்துகொண்டேன் * என்று பாசுரமுள்ளது. வடவண்டையகத்தில் ஒரு

பெண் மகளை வேறுபட்டவடிவையுடையவளாகச் செய்துவைத்ததாய் இதில் கூறப்படுகின்றது. வேற்றுருவஞ் செய்துவைத்த வகையைத் திருமங்கையாழ்வார் பெரியதிருமொழியில் (10-7-6) * கண்மலர்சோர்ந்து முலைவந்து விம்மிக் கமலச் செவ்வாய் வெளுப்ப, என்மகள் வண்ண மிருக்கின்றவா நங்காய் என்செய்கே னென்செய்கேனே * என்ற பாசுரத்தினல் விவரித்தருளி யுள்ளமைகாண்க. ஆக வடக்கிலகத்தில் அனுபவம் சொல்லப்பட்டதாகத் தேறிற்று. இது பக்தியோகமாகும். தேஹ விகாரமடைவது பக்தியோகத்தின் காரியமேயன்றோ. ஆக வடக்கிலகமென்பது பக்தியோகத்திற்கிட்ட ஸம்ப்ரதாய ஸங்கேதமென்று கொள்ளத்தகும்.

(நிகமனம்.) கீழையகத்தாரென்று கர்மயோக நிஷ்டர்களைச் சொல்லுகிறது. மேலை யகத்தாரென்று ஜ்ஞானயோக நிஷ்டர்களைச் சொல்லுகிறது. வடக்கிலகத்தாரென்று பக்தி யோக நிஷ்டர்களைச் சொல்லுகிறது. தென்னண்டை யகத்தைப்பற்றி திவ்யப்ரபந்தங்களிற் பாசுரம் காணவில்லை. ஆனாலும் அதனையும் ஒருவாறு யோஜிக்கலாம். பெரியாழ்வார் திரு மொழியில் (5-2-2.) * சித்திர்குத்தனெழுத்தால் தேன்புலக்கோன் பொறியொற்றி, வைத்தவிலச் சினைமாற்றித் தூதுவரோடியொளித்தார் * என்ற பாசுரத்தில் தெற்குப்ரஸ்தாவமுள்ளது. தெற் குத் திசைக்குத் தலைவனை யமனுடைய படர்கள் ஓடியொளித்த கதை இப்பாசுரத்திற் சொல் லப்பட்டது. * பரிஹர மதுஸூதந ப்ரபந்நாந் * என்கிற ஸ்ரீ விஷ்ணுபுராண ச்லோகத்திற்கு வியாக்யானம் போலமைந்த இந்தப்பாசுரம் ப்ரபத்தியோகநிஷ்டர்களின் பெருமை சொல்லு வதாலால், ப்ரபத்தியோகத்திற்குத் தெற்கு ஸங்கேதமென்றும் ஒருவாறு கொள்ளலாம்.

---

# ஓர் முக்கிய அறிவிப்பு.

## சந்தாதாரர்களுக்குப் புதிய ஸௌகரியம்.

ஸ்ரீராமாநுஜன் பத்ரிகையின் 23-வது இதழ் இது. அடுத்த ஸஞ்சிகையோடு இரண் டாவது வருஷம் பூர்த்தியாகிறது. 25-வது இதழ் மூன்றும் வருஷத்தொடக்கமாகும். ஸத் க்ரந்த ப்ரகாசந ஸபையின் வரு சந்தா 12 ரூபாயும் போஸ்டேஜுக்காகத் தனியே 3 ரூபாயும் ஆக 15 ரூ. என்று இதுவரை ஏற்படுத்தியிருந்ததில் சிலரோ பலரோ அஸௌகரியம் பாவிக் கிறபடியால் கூடியமட்டில் ஸௌகரியம் செய்து கொடுக்கவேணுமென்கிற எண்ணத்துடன் கீழ்க்கண்டவிதமாக முடிவு செய்யப்பட்டிருக்கிறது. ஸபை மெம்பர்களுக்கு போஸ்டேஜ் உட்பட வருஷச்சந்தா 10 ரூ. மாத்திரமே. ஸ்ரீராமாநுஜன் பத்திரிகை மாத்திரம் விரும்புமவர் களுக்கு வருஷச்சந்தா 2—8—0 மாத்திரமே. ஒரு மாதத்தில் லோகாபிராமமான வியாஸங் கள் கொண்ட பத்ரிகையும், மற்றொருமாதத்தில் உரைநூல்கள்கொண்ட ஸஞ்சிகையும் வெளிவந் துகொண்டிருக்குமென்று சென்றமாதத்துப் பத்திரிகையில் ப்ரகடனம் செய்திருக்கிறோம். அப்படியேதான் வெளிவரும். 2—8—0 செலுத்தும் சந்தாதாரர்களுக்கு மூன்றுவிட்டொரு மாதம் ஸ்ரீராமாநுஜன் பத்ரிகைமாத்திரம் அனுப்பப்பட்டுவரும். 10—0—0 ரூ. செலுத்தும் சந்தாதாரர்களுக்கு மாதந்தோறும் எல்லாம் அனுப்பப்பட்டுவரும். 2—8—0 சந்தாதாரர்க ளுக்கு மீ 3 பாரங்கள் (அதாவது 24 பக்கம் வீதம்) வருஷத்தில் 18 பாரங்கள் (அதாவது 144 பக்கங்கள்) கிடைக்கும். 10—0—0 ரூ. செலுத்துமவர்களுக்கு இதற்குமேல் மூன்று பங்கு அதிகம் கிடைக்கும். அவை வியாக்கியான க்ரந்தங்களாகவேயிருக்கும். பாரங்களைச் சேர்த்து முடிவில் பயிண்டு செய்துகொள்ளக்கூடியதாக வெளியிடுவோம்.

இப்படிக்கு:

மானேஜர்—ஸத்க்ரந்த ப்ரகாசந ஸபை.

# நான்கு தூதுகளின் மருமம்.

நம்மாழ்வார் திருவாய்மொழியில் எம்பெருமான் திறத்துத் தூதுவிடும் பதிகங்கள் நான்கு; அவையாவன—முதற்பத்தில் * அஞ்சிறையமடநாரை. ஆறும்பத்தில் * வைகல் பூங்கழிவாயும் * பொன்னுலகாளீரும். ஒன்பதாம்பத்தில் * எங்கானலகங்கழிவாய். ஆக இந்த நான்கு பதிகங்களிலும் தூதுவிடுகிறது பொதுவாக எம்பெருமானைக் குறித்தே யாகிலும், பாசுரங்களிலேஊடுருவி ஆராயுங்கால் சில விசேஷங்கள் தெரியும்.

எம்பெருமான் பரவ்யூஹ விபவ அந்தர்யாமி அர்ச்சாவதாரரூபேண ஐவ்கைப்பட்டிருக் கையாலே அந்த ஐந்து நிலைமைகளிலும் தூது விடுகிறாரென்பது சொற்போக்கில் காணக்கிடக் கின்றது. (1.) *அஞ்சிறையமடநாரையில் *கடலாழி நீர் தோற்றி அதனுள்ளே கண் வளரு மடலாழியம்மானைக் கண்டக்காலிது சொல்லி * என்று அருளிச் செய்கையாலே அப்பதிகம் வ்யூஹநிலையில் தூதுவிடுவதாகும். கடலாழி நீர் தோற்றி அதனுள்ளே கண் வளருகைதானே வ்யூஹாவஸ்தையென்பது. (2.) இனி * வைகல்பூங்கழிவாயில் * மாறில் போரரக்கன் மதிள் நீறெழச் செற்றுகந்த ஏறு சேவகனார்க்கு * என்று இலங்கையெரித்த இராமபிரானிடம் செல்லும்படி தூதுவிடுகையாலே அப்பதிகம் விபவாவதாரத்தில் தூது விடுவதாகும். ராமாவ தாரம் விபவாவதாரங்களுள் ஒன்றாதலால். இப்பதிகம் மலைநாட்டிலுள்ள திருவண்வண்டூர்த் திருப்பதி விஷயமாகையாலே இது அர்ச்சாவதாரத்தில் தூதுவிடுகிறபடியல்லவோ வென்று சங்கிக்கவேண்டா; மேலேயெடுத்துக்காட்டிய பாசுரத்தின் பண்பு நோக்கி 'இது விபவாவதாரத்தில் விடும் தூது' என்கை மிகப் பொருந்தும். இனி (3) * பொன்னுலகாளீரில் பரத்வத்திலும் அந்தர்யாமித்வத்திலும் தூது விடப்படுவதாக விளங்குகின்றது. இப்பதிகத் தில் *மாமதுவார் தண்டுழாய் முடி வானவர்கோனைக் கண்டு, யாமிதுவோ தக்கவா றென்ன வேண்டும் * என்கையாலே, வானவர்கோன்—பரமபதநிலயனை பரவாஸுதேவனைகையாலே அவன்பால் தூதுவிடுவதென்பது விளங்கிற்று. இப்பதிகந்தன்னிலேயே * எங்குச் சென்று மாகிலுங்கண்டு இதுவோ தக்கவா றென்மினே * என்றும் பாசுரமுள்ளது; அப்பெருமான் எங்கேனும் தன்னை யொளித்துக் கொண்டு கிடந்தாலும் அங்கும்புகுந்து சொல்லுமாறு தூது விடப்படுகையாலே அந்தர்யாமித்வத்தில் தூதும் இப்பதிகத்திலேயே காணலாயிராநின்றது. (4) இனி * எங்கானலகங்கழிவாயென்னும் பதிகத்தில் *திருமூழிக்களத்தார்க்கே* என்று திருமூழிக்கள மென்கிற திருப்பதியில் தூதுவிடுகையாலே இப்பதிகம் அர்ச்சாவதாரத் தில் தூது விடுவதாகும். ஆக, தூதுவிடும்பதிகங்கள் நான்குக்கும் எம்பெருமானுடைய பரவ்யூஹ விபவாந்தர்யாமி அர்ச்சாவதார நிலைகள் ஐந்தும் விஷய மென்பது விளக்கப்பட்டது.

ஓரிடத்தில் தூது விட்டுக் காரியமாகவில்லை யென்றால் மற்றோரிடத்தில் தூதுவிடுவது எதற்காக? என்றொரு கேள்வி பிறக்கும். எம்பெருமான் அனந்த கல்யாண குணநிதி யாகையாலே, ஒரு குணம் பழுதுபட்டாலும் மற்றொரு குணம் பலிக்கப்பெறலாமே; அக் குணமும் பழுதுபட்டாலும் இன்னொரு குணம் காரியம் செய்யப் பெறலாமே; அக்குணமும் விபலமானாலும் வேறொரு குணம் பயன் பெறுவிக்கத் தகுமே என்கிற நசை ஸம்பாவிதமாகை யால் பலகால் தூதுவிடத்தகும். தூதுவிடும்பதிகமொவ்வொன்றுக்கும் ஒவ்வொரு திருக் குணத்தை விளங்கச் செய்வதிலே நோக்காயிருக்குமென்றதாயிற்று இதனைச் சிறிது விவரிப் போம்.

## முதல் தூதின் விவரணம்.

முதல்தூதாகிற * அஞ்சிறையமடநாரையில் * என் பிழைத்தாள் திருவடியின் தகவி னுக்கு * என்று எம்பெருமானைக் கேட்குமாறு சொல்லியனுப்புகையாலே அப்பெருமானுடைய க்ஷமாகுணத்தைப் பற்றுசாகக் கொண்டு இத்தூது விடுவதாக விளங்குகின்றது. மேலெடுத்த பாசுரத்தின் கருத்தாவது, [திருவடியின் தகவினுக்கு என் பிழைத்தாள்] ஸ்வாமியான தேவரீருடைய கருணைக்குப் போதும்படி என்ன பிழை செய்தாள்? என்றவாறு. உண்மையில் தான் பிழை செய்தது உண்டாகிலும் எம்பெருமானது பொறுமையின் பெருமையைக் காணுமிடத்து 'அதன் வயிறு நிறையுமாறு நாம் பிழை செய்யவில்லையே, நாம் செய்த பிழை அக்குணத்திற்கு எந்த மூலைக்கு? அதன் வயிற்றிற்கு ஒரு கவளத்திற்கும் போதாதே' என்று நினைக்கவேண்டும்படியாக இருத்தலால் இங்ஙனஞ் சொல்லக் குறையில்லையென்க. இங்கே ஈடுமுப்பத்தாறுயிரப்படி ஸ்ரீ ஸூக்தி காண்மின்;—"என் குற்றத்தைப் பார்த்து உமிக்க நினைத்தாராகில், ........ஸ்வாமிகளான தம் பொறை வயிறுநிறைய எங்களால் குற்றஞ் செய்யப்போமோ என்னுங்கோள்" என்பதாம். எத்தனை பிழைகள் செய்திருந்தாலும் ஒரு நொடிப் பொழுதில் அவற்றைக் கபளீகரிக்கவல்ல திருக்குணம் அப்பெருமான் பக்கலில் இருக்க, பிழையென்று வாய்திறக்கவும் வழியுண்டோவென்று கருத்து.

ஸ்ரீராமபிரான் வாலியை வதைத்து ஸுக்ரீவமஹாராஜர்க்கு முடிசூட்டிக் கிஷ்கிந்தைக்குப் போகவிட்டு வர்ஷாகாலம் முடிந்தவாறே இலங்கைக்குப் புறப்படப் படை திரட்டிக் கொண்டு வருமாறு நியமித்துவிட்டுத் தானும் மால்யவானிலே காலங்கழியாநிற்க, நாளடைவிலே மாரிகாலமும் முடிந்தும் ஸுக்ரீவன் காமபரவசனாய்க் கிடந்து வாராதேயிருக்க, பெருமாள் சீறிச்சிவந்து இளையபெருமாளையனுப்பி நாணொலியெழுப்பி அச்சமுறுத்த, அப்போது தாரை எழுந்துவந்து கேட்கிறாள்—* கிம் கோபமூலம் மநுஜேந்த்ரபுத்ர! * என்கிறாள். இங்ஙனே சீறிவருவதற்குக் காரணமென்? என்பது இவளுடைய கேள்வி. கோபத்திற்குக் காரணம் தெரியாமையில்லையே யிவளுக்கு; நன்றாகத் தெரிந்திருந்தும் கிம் கோபமூலம்? என்றதன் கருத்து என்னவெனில்; உங்களுடைய க்ஷமாகுணத்தை நம்பியன்றோ நாங்கள் பராக்காயிருந்தது, அப்படி விச்வஸிக்கத்தக்க க்ஷமையையுடையீர்களான நீங்கள் சீறலாமோ? என்பதன்றோ தாரையின் கேள்விக்குக் கருத்து; அதுபோலவே இங்குமென்க. ஆக, முதல்தூதில் * என் பிழைத்தாள் திருவடியின் தகவினுக்கு * என்கிற பாசுரம் உயிராகக் கொள்ளப்பட்டு, க்ஷமா குணம் பற்றுசாக விடுவது இந்தத்தூது என்று தேறிற்று. க்ஷமாகுணத்தை அவனுக்கு நினைப்பூட்டுமாறு தூதுவிடப்பட்டதென்க.

இதற்குமேல் ஒரு கேள்வி பிறக்கும்; க்ஷமாகுணம் தனக்குள்ளதென்பதை எம்பெருமான்றான் அறியானோ? இத்தலை நினைப்பூட்டவேண்டிய அவசியம் என்கொல்? என்று. இக்கேள்விக்கு ஆழ்வார் ஸ்ரீஸூக்தியிலிருந்தே நன்கு ஸமாதானம் கிடைக்கின்றது. * என் பிழைத்தாள் திருவடியின் தகவினுக்கு * என்றதற்கு முன்னே * என் பிழையே நினைந்தருளி அருளாத திருமாலார்க்கு * என்றிருக்கையாலே, தம்முடைய பிழைகள் அப்பெருமானுடைய க்ஷமாகுணத்தை மறப்பித்ததாகத் தெரிவித்தவாறு. ஆகவே அக்குணத்தை நினைப்பூட்டவேண்டுவது அவசியமாயிற்று. [என்பிழையே நினைந்தருளி] எனது பிழைகளை மாத்திரம் நினைந்தாரேயல்லது பிழை பொறுக்கவல்ல தமது க்ஷமாகுணத்தை நினைந்தாரில்லையே; அதனை மறந்தாப்போலே எனது பிழைகளையும் மறந்தாலாகாதோ? என்னுங்கோளென்கிறாள். [அருளாத திருமாலார்க்கு] பிழையுடையார் பக்கலிலே அருள் செய்யாவிடின் இவர் எங்ஙனம் திருமாலாக

இருக்கமுடியும்? அநுக்ரஹமே வடிவெடுத்தவளென்றும் நிக்ரஹமென்பதைக் கனவிலுங் கண்டறியாதவளென்றும் புகழ்பெற்றவளான பிராட்டிக்கு அவர் மணவாளராகில் அவளது உபதேசத்தின்படி நடக்கவேண்டியவரன்றோ; * ந கச்சிந்நாபராத்யதி=பிழை செய்யாதவனே உலகில் இல்லை * என்று நிரூபிக்கின்ற பிராட்டியோடே அவர்தாம் ஸம்பந்தம் பெற்றுவைத்து இங்ஙனே பிழைகண்டு உபேக்ஷித்தல் தகுதியோ? இத்தன்மையைப் பிராட்டியறிந்தாளாகில் அவள் தானும் உமது முகத்திலே விழியாள் என்று சொல்லுங்கோள்—என்றிவ்வளவும் அருளாததிருமாலார்க்கு என்ற சொற்செறிவிலே அடங்கும்.

## இனி இரண்டாந்தூதின் விவரணம்.

இரண்டாந்தூதாகிய * வைகல் பூங்கழிவாயில் * புணர்த்தபூந்தண்டுழாய்முடி நம்பெருமானைக்கண்டு புணர்த்த கையினராய் அடியேனுக்கும் போற்றுமினே * என்பது உயிரான பாசுரம். எம்பெருமான் திருமுடியில் தனிமாலையிட்டிருப்பது தாம் ஆர்த்தரக்ஷண தீக்ஷிதர் என்பதைக் காட்டுதற்காகவேயன்றோ; அன்றாகில் திருவபிஷேகத்திலே அவர் வனையம் வைக்கவேணுமோ? ஸ்வாமிந்! தேவரீர் ஆர்த்தரக்ஷண தீக்ஷிதராயிருந்துவைத்து ஆர்த்தியே வடிவெடுத்த பராங்குசநாயகியை இப்படி உபேக்ஷித்திருத்தல் தகுதியோவென்று கேளுங்கோள் என்று சொல்லித் தூது விடுகையாலே, அப்பெருமானுடைய ஆர்த்தரக்ஷண தீக்ஷிதத்வமென்னுங் குணத்தைப் பற்றாசாகக் கொண்டு இந்தத் தூதுவிடுவதாக விளங்குகின்றது. அன்றியும் இப்பதிகத்தில் * கைகொள் சக்கரத்தென்கனிவாய்ப் பெருமானைக்கண்டு கைகள் கூப்பிச் சொல்லீர் * என்றும் *கறங்குசக்கரக் கைக் கனிவாய்ப் பெருமானைக்கண்டு இறங்கிநீர் தொழுதுபணியீர் * என்றும் சொல்லுகையாலே * அருளார் திருச் சக்கரத்தால் அகல் விசும்பும் நிலனும் இருளார் வினைகெடச் செங்கோல் நடாவுதிர் * என்கிற திருவிருத்தப் பாசுரத்தின் படியே திருவாழியாழ்வானும் ஜகத்ரக்ஷண தீக்ஷிதனுகையாலே அந்தப் பாசுரங்கள் கொண்டும் எம்பெருமானுடைய ரக்ஷண தீக்ஷையை நினைப்பூட்டித் தூது விடுகிறதாகவுங் கொள்ளலாம். இயற்கையாகவே ரக்ஷாதீக்ஷிதனயிருக்குமவன் தனக்கு அஸாதாரணமான அக்குணத்தை மறந்திடுவனே? அதை நினைப்பூட்டவேண்டிய அவசியம் என்கொல்? என்று கேள்வி பிறக்கும்; இக்கேள்விக்கும் ஆழ்வார் ஸ்ரீஸூக்தியிலிருந்தே ஸமாதானம் கிடைக்கின்றது. * சிறந்த செல்வம் மல்கு திருவண்வண்டூருறையும் * என்றருளிச் செய்திருக்கையாலே திருவண்வண்டூரின் ஐச்வர்யச் சிறப்பைக் கண்டு கால்தாழ்ந்து தம்முடைய ரக்ஷாதீக்ஷையை மறந்திருப்பர் என்று தெரிவித்தவாறு. ஆர்த்தரக்ஷணதீக்ஷிதரான நீர் மற்றொன்றில் கால்தாழத் தகுமோ? என்று விண்ணப்பஞ் செய்யுங்கோள் என்று சொல்லித் தூதுவிடுகிறபடி. இப்பதிகத்தில் * வேத வேள்வியொலிமுழங்குந்தண் திருவண்வண்டூர் * என்றும் சொல்லுகையாலே, வேதவொலி கேட்பதிலும் வேள்வியொலி கேட்பதிலும் பராக்காலே தம்முடைய ரக்ஷா தீக்ஷையை மறந்திருப்பர்; வேதவொலியை நீர் கேட்கும்போதெல்லாம் அந்த வேதங்களில் முறையிடப்படுகிற உம்முடைய ரக்ஷா தீக்ஷை உமக்கு நினைவுக்கு வரவில்லையா? அதை மறக்க விரகுண்டோவென்று கேளுங்கோள் என்கிறதாகவுமாம். * விடலில் வேத வொலி முழங்குந் தண்திருவண்வண்டூர் * என்ற பாசுரமும் இதற்குப் பாங்காகும்.

## இனி, மூன்றாந்தூதின் விவரணம்.

* பொன்னுலகாளீரோ வென்கிற திருவாய்மொழி மூன்றாந்தூது. இதில், * தன்மன்னுநீள்கழல் மேல் தண்டுழாய் நமக்கன்றி நல்கான் * என்கிற பாசுரம் உயிரானது. * தோளிணைமேலும் நன் மார்பின் மேலும் சுடர் முடிமேலும் தாளிணைமேலும் புனைந்த

தண்ணந்துழாயுடையம்மான் * என்கிறபடியே திருத்தோள் முதலான பல அவயவங்களிலும் அவர் திருத்துழாய் அணிந்துகொள்வர்; எதை ஆர்க்குக் கொடுத்தாலும் அடிமேலணிந்து கொள்ளுமது அடியார்களுக்கேயாகையாலே, திருவடிகளில் சாத்தின திருத்துழாயை நமக் கன்றி மற்றையோர்க்குத் தந்திடமாட்டார் என்று இங்கு அறிவிக்கப்படுகிறது. ஐகரஸ்ய மென்கிற குணமிது. அதாவது, அடியார்களோடு ஏகரஸனாகை. சேஷியான தன்னுடைய ப்ரஸாதத்தை சேஷபூதர்களுக்குக் கொடுத்தே தீரவேணுமென்று கொண்டிருக்கை தான் இக்குணமாவது. இது பற்றுசாகத் தூதுவிடுகிறாரிதில். இக்குணத்தை நினைப்பூட்டவேண் டும்படி இதனை எம்பெருமான் மறந்தது எதனாலென்னில்; அக்காரணந்தன்னை ஆழ்வாரே அருளிச் செய்கிறார்—*மூன்னுலகங்களெல்லாம் படைத்த முகில் வண்ணன் கண்ணன் என்னலங்கொண்ட பிரான் தனக்கு* என்று. தன்னால் படைக்கப்பட்ட ஜகத்தின் பரப்பை ரக்ஷிக்கிற பராக்காலே அடியார்களோடு தனக்குண்டான ஐகரஸ்யத்தை மறந்து நம்மை நினையாதிருந்தானித்தனை என்று தெரிவித்தவாறு. ஆக, ஜகத்ரக்ஷணபராக்காலே மறப்பிக்கப் பட்ட ஐகரஸ்யம் பற்றுசாக விடப்பட்டது மூன்றாந்தூது என்றதாயிற்று.

## இனி நான்காந்தூதின் விவரணம்.

* எங்கானலகங்கழிவாயில், * தக்கிலமே கேளீர்கள்—செக்கமலத்தலர்போலுங் கண்கைகால் செங்கனிவாய், அக்கமலத்திலைபோலுந் திருமேனியடிகளுக்கே * என்றும் * பூந்துழாய் முடியார்க்குப் பொன்னாழிக்கையாருக்கு * என்றும் ஸௌந்தரியம் பேசப் பட்டுத் தூதுவிடுகையாலே வடிவழகையுணர்த்திவிட்ட தூது இது என்று தெரிய வருகிறது. பிரிந்தார்க்கு ப்ராணன் கொண்டிருக்கவொண்ணாதபடியான தன் வடிவழகை மறந்து நம்மை நினையாதிருந்தார் திருமூழிக்களத்தார்; இவ்வழகியவடிவைப் பிரிந்தார் தரிப்பரோ வென்று அவ்வழகையறிவித்துவிட்டால் வாராதிரார் என்று கொண்டு அதை யறிவிக்கிறபடி. தம் வடிவழகைத் தாம் அறியாரோ? இவருணர்த்தவேண்டும்படி மறந்திருக்கைக்குக் காரண மென்? என்னில்; இதுவும் அப்பதிகத்திலேயே ஆழ்வாரால் தெரிவிக்கப்பட்டது; * தமரோடங்குறைவார்க்கு * என்பதனால்; தம்மையுகந்த பாகவதர்களோடு சேர்ந்து வாழ் கிற பெருமாளாகையாலே அந்த பாகவதர்களோடுண்டான சேர்த்தியில் இனிமையாலே தம் ஸௌந்தரியத்தை மறந்துகிடப்பதாகத் தெரிவிக்கப்பட்டது. ஆக, தமரோட்டை வாஸம் மறப்பித்த ஸௌந்தர்யத்தை யுணர்த்திவிடுவது நாலாந்தூது என்றதாயிற்று.

ஆக இவ்வளவு விஷயங்களும், "தம்பிழையுஞ் சிறந்தசெல்வமும் படைத்தபரப்பும் தமரோட்டை வாஸமும் மறப்பித்த க்ஷமாதீக்ஷாஸாரஸ்ய ஸௌந்தர்யங்களையுணர்த்தும் வ்யூஹ விபவபரத்வத்வயார்ச்சைகள் தூதுநாலுக்கும் விஷயம்" என்ற ஆசார்யஹ்ருதய சூர்ணையில் (156) அற்புதமாக அடங்கியிருக்குமாறு காண்க.

தூதுவிடும் பிரகரணங்களில் இரண்டு வகையான விஷயங்கள் ஆராயத்தக்கவையுண்டு; தூதுக்கு இலக்கான எம்பெருமானைப் பற்றியவைகளும், தூதனுப்பப்படுகிற பறவைகளின் விஷயங்களும். இவற்றில், எம்பெருமானைப் பற்றிய விஷயங்கள் இப்போது விவரிக்கப்பட் டன. பக்ஷிகளைப்பற்றின விஷயங்கள் அடுத்த இதழில் விவரிக்கப்படும். (ப்ர. அ.)

149. கஞ்சனும் காளியனும் களிறும் மருதுமெருதும் வஞ்சனையில் மடிய வளர்ந்த மணிவண்ணன். ... (4-3-2)

150. மன்னுநரகன் தன்னைச் சூழ்போகிவளைத்தெறிந்து கன்னி மகளிர் தம்மைக் கவர்ந்த கடல் வண்ணான். .... (4-3-3)

151. மாவலி தன்னுடைய மகன் வாணன் மகளிருந்த காவலைக் கட்டழித்த தனிக்காளை. .... (4-3-4)

152. பலபல நாமுஞ்சொல்லிப் பழித்த சிசுபாலன் தன்னை அலவலைமை தவிர்த்த அழகன். ... (4-3-5)

153. பாண்டவர் தம்முடைய பாஞ்சாலி மறுக்க மெல்லாம் ஆண்டங்கு நூற்றுவர்தம் பெண்டிர்மேல் வைத்தவப்பன். .... (4-3-6)

154. குருந்தமொன் றொசித்தான். .... (4-4-7)

155. சாடிறப்பாய்ந்த தலைவன், தாமோதரன். ... (4-6-6)

156. கண்ணுக்கினிய கருமுகில் வண்ணன். .. (4-6-7)

157. செம்பெருந்தாமரைக் கண்ணன். .... (4-6-8)

158. தலைப்பெய்து குமுறிச் சலம் பொதிமேகஞ் சலசல பொழிந்திடக் கண்டு மலைப்பெருங்குடையால் மறைத்தவன், மதுரைமால், ... (4-7-6)

159. விற்பிடித்திறுத்து வேழத்தை முறுக்கி மேலிருந்தவன் தலைசாடி மற்பொருதெழப்பாய்ந்தரையனை யுதைத்தமால், ... (4-7-7)

160. திரைபொரு கடல்சூழ் திண்மதிள் துவரை வேந்து, தன் மைத்துனன் மார்க்காய் அரசினையவிய அரசினையருளுமரி. .... (4-7-8)

161. மாதவத்தோன் புத்திரன்போய் மறிகடல் வாய் மாண்டானை ஓது வித்த தக்கணையாவுருவுருவே கொடுத்தான். ... (4-8-1)

162. பிறப்பகத்தே மாண்டொழிந்த பிள்ளைகளை நால்வரையும் இறைப் பொழுதில் கொணர்ந்து கொடுத்து ஒருப்படுத்தவுறைப்பன். ... (4-8-2)

163. மருமகன்றன் சந்ததியையுயிர் மீட்டு மைத்துனன்மார் உருமகத்தே வீழாமே குருமுகமாய்க்காத்தான். .... (4-8-3)

164. கருளுடையபொழின் மருதுங் கதக்களிறும் பிலம்பனையும் கடிய மாவும் உருளுடைய சகடரையும் மல்லரையுமுடைய விட் டோசை கேட்டான். ... (4-9-3)

165. பதினாறுமாயிரவர் தேவிமார் பணி செய்யத் துவரை யென்னுமதில் நாயகராகி வீற்றிருந்த மணவாளர். ... (4-9-5)

166. மைத்துனன்மார் காதலியை மயிர்முடிப்பித்து அவர்களையே மன்ன ராக்கி உத்தரைதன சிறுவனையுமுய்யக் கொண்ட வுயிராளன். ... (4-9-6)

167. குன்றெடுத்தாநிரைகாத்த வாயன், கோநிரை மேய்த்தவன். ... (4-10-9)

168. கொடுமைக்கஞ்சனைக்கொன்று தன்தாதைகோத்த வன்தளைகோள் விடுத்தான். ... (5--1-4)

169. குஞ்சரம் வீழக் கொம்பொசித்தான். ... (5-1-5)

170. வண்ணமால் வரையே குடையாக மாரிகாத்தவன், களிறட்ட பிரான்... (5-1-9)

171. மக்களறுவரைக்கல்லிடைமோத விழந்தவள்தன் வயிற்றில் சிக்கென வந்து பிறந்து நின்றான். .... (5-0-1)

172. தூதுசென்றான் குருபாண்டவர்க்காய் அங்கோர் பொய்ச்சுற்றம் பேசிச்சென்று பேதஞ்செய்தெங்கும் பிணம்படுத்தான், ... (5-3-5)

173. மைத்துனன்மார்களை வாழ்வித்து மாற்றலர் நூற்றுவரைக் கெடுத்தான். .... (5-3-9)
174. சென்றங்கு வாணனையாயிரந்தோளுந் திருச் சக்கரமதனால் தென்றித் திசை திசை வீழச்செற்றான். ... (5-3-10)
175. மருப்பொசித்தான், மல்லடர்த்தான்! ... (5-4-7)
176. வேயர்தங்கள் குலத்துதித்த விட்டுசித்தன் மனத்தே கோயில்கொண்ட கோவலன், கொழுங்குளிர் முகில்வண்ணன், ஆயரேறு, ... (5-4-11)

## திருப்பாவை.

177. கூர்வேல் கொடுந்தொழிலன் நந்தகோபன் குமரன்; ஏரார்ந்த கண்ணியசோதை யிளஞ்சிங்கம்; கார்மேனிச் செங்கண் கதிர்மதியம் போல் முகத்தான். ... (1)
178. மாயன்; மன்னு வடமதுரை மைந்தன்; தூயபெருநீர் யமுனைத் துறைவன்; ஆயர் குலத்தினில் தோன்றுமணி விளக்கு; தாயைக்குடல் விளக்கஞ்செய்த தாமோதரன். ... (5)
179. பேய்முலை நஞ்சுண்டு கள்ளச்சகடம் கலக்கழியக் காலோச்சி வெள்ளத்தரவில் துயிலமர்ந்த வித்து, .... (6)
180. மாவாய் பிளந்தான்; மல்லரை மாட்டிய தேவாதி தேவன். ... (8)
181. புள்ளின் வாய் கீண்டான். ... (13)
182. சங்கொடு சக்கரமேந்துந்தடக்கையன், பங்கயக்கண்ணான். ... (14)
183. வல்லானை கொன்றான்; மாற்றாரை மாற்றழிக்க வல்லான்; மாயன். .... (15)
184. குத்துவிளக்கெரியக் கோட்டுக்கால் கட்டில்மேல் மெத்தென்ற பஞ்ச சயனத்தின் மேலேறிக் கொத்தலர் பூங்குழல் நப் பின்னை கொங்கைமேல் வைத்துக் கிடந்த மலர் மார்பன். ... (19)
185. வள்ளல் பெரும் பசுக்களாற்றப் படைத்தான் மகன் ... (21)
186. பொன்றச் சகடமுதைத்தான்; கன்று குணிலாவெறிந்தான், குன்று குடையா வெடுத்தான். ... (24)
187. ஒருத்தி மகனாய்ப் பிறந்து ஓரிரவிலொருத்தி மகனாயொளித்து வளரத் தரிக்கிலானாகித்தான் தீங்கு நினைந்த கருத்தைப் பிழைப்பித்துக் கஞ்சன் வயிற்றில் நெருப்பென்ன நின்ற நெடுமால். ... (25)
188. கூடாரை வெல்லுஞ் சீர்க்கோவிந்தன். ... (27)
189. குறைவொன்று மில்லாத கோவிந்தன். ... (28)
190. பெற்றம் மேய்த்துண்ணுங் குலத்தில் பிறந்தவன், ... (29)

## நாச்சியார் திருமொழி

191. ஓர்கரியலற மருப்பினை யொசித்துப் புள்வாய் பிளந்த மணி வண்ணன். ... (1-10)
192. குதி கொண்டரவில் நடித்தான். ... (3-2)
193. குடத்தை யெடுத்தேற விட்டுக் கூத்தாட வல்லகோ, ... (3-6)
194. கோமளவாயர் கொழுந்து. ... (3-8)
195. கஞ்சன் வலை வைத்தவன்று காரிருளெல்லில் பிழைத்து நெஞ்சுதுக் கஞ்செய்யப் போந்தான், வஞ்சகப் பேய்ச்சி பாலுண்ட மசுமையிலி. ... (3-9)

196. அணிவாணுதல் தேவகிமாமகன்; மிகுசீர் வசுதேவர் தங்கோமகன்.... (4-3)
197. ஆய்ச்சிமார்களு மாயருமஞ்சிடப் பூத்த நீள் கடம்பேறிப் புகப் பாய்ந்து வாய்த்த காளியன் மேல் நடமாடிய கூத்தன். ... (4-4)
198. ஓடைமாமத யானையுதைத்தவன். ... (4-5)
199. மருத முறிய நடை கற்றவன், கஞ்சனை வஞ்சனையில்செற்றவன் திகழும் மதுரைப்பதிக் கொற்றவன். ... (4-6)
200. அன்றின்னுதன செய் சிசுபாலனும் நின்ற நீள் மருதுமெருதும் புள்ளும் வென்றிவேல் விறற்கஞ்சனும் வீழ முன் கொன்றவன். .... (4-7)
201. ஆவலன்புடையார் தம்மனத்தன்றி மேவலன்; விரைசூழ் துவரா பதிக்காவலன்; கன்று மேய்த்து விளையாடுங் கோவலன். ... (4-8)
202. அணியாய்ச்சியர் சிந்தையுள் குழகனார். ... (4-10)
203. மதுரையார் மன்னன், ... (6-5)
204. மருப்பொசித்த மாதவன். ... (7-1)
205. வடமதுரையார் மன்னன்; வாசுதேவன். ... (7-3)
206. செங்கட்கருமேனி வாசுதேவன். ... (7-7)
207. கண்ணாலங்கோடித்துக் கன்னிதன்னைக் கைப்பிடிப்பான் திண்ணார்ந் திருந்த சிசுபாலன் தேசழிந்து அண்ணாந்திருக்கவே யாங்கவளைக் கைப்பிடித்த பெண்ணாளன். ... (11-9)
208. கொந்தளமாக்கிப் பரக்கழித்துக் குறும்பு செய்வானோர் மகன். ... (12-3)
209. நீர்க்கரை நின்ற கடம்பை யேறிக்காளியனுச்சியில் நட்டம் பாய்ந்து போர்க்களமாக நிருத்தஞ்செய்தான். ... (12-3)
210. பத்தவிலோசனத்து வோர்த்துப் பசித்து வயிறசைந்து வேண்டடிசி லுண்ணும்போ தீதென்று பார்த்திருந்து நெடுநோக்குக் கொள்வான். .... (12-6)
211. கற்றினம் மேய்க்கிலும் மேய்க்கப்பெற்றான், காடுவாழ் சாதியுமாகப் பெற்றான், பற்றியுரலிடையாப்புமுண்டான், காவிகளுய்ய மழை தடுத்துக் கோவர்த்தனங் கொற்றக்குடையாகவேந்திநின்றான்... (12-8)
212. கண்ணனென்னுங் கருந்தெய்வம். ... (13-1)
213. கோலால் நிரைமேய்த்தாயன். ... (13-2)
214. கஞ்சைக்காய்ந்த கருவில்லி. .... (13-3)
215. ஆயர்பாடி கவர்ந்துண்ணுங்காரேறு. ... (13-4)
216. தழையின்பொழில்வாய்நிரைப்பின்னே குழலூதிவருகின்ற நெடுமால். ... (13-5)
217. நந்தகோபன் மகனென்னுங் கொடிய கடிய திருமால். .... (13-6)
218. கொள்ளை கொள்ளிக் குறும்பன், கோவர்த்தனன். ... (13-8)
219. அல்லல் விளைத்தபெருமான்; ஆயர்பாடிக் கணிவிளக்கு. .... (13-10)
220. பட்டிமேய்ந்தோர் காரேறு; பலதேவர்க்கோர் கீழ்க்கன்று, இட்டமான பசுக்களை இனிது மறித்து நீரூட்டி விட்டுக்கொண்டு விளையாடுவான். ... (14-1)
221. ஆயர்பாடி கவர்ந்துண்ணும் குணுங்கு நாறுங் குட்டேறு; கோவர்த்தனன். ... (14-2)

222. மாலாய்ப்பிறந்த நம்பி; மாலேசெய்யும் மணாளன்; ஏலாப்பொய்களுரைப்பான். ... (14-3)

223. போர்த்த முத்தின்குப்பாயப் புகர்மால்யானைக் கன்றேபோல் வேர்த்து நின்று விளையாடுவான். ... (14-4)

224. பீதகவாடை யுடைதாழப் பெருங்கார்மேகக் கன்றேபோல் வீதியார வருவான். ... (14-5)

225. தருமமறியாக்குறும்பன்; தன்கைச்சார்ங்க மதுவேபோல் புருவவட்டமழகிய பொருத்தமிலி; உருவுகரிதாய் முகம் செய்தாய் உதயபருப்பதத்தின்மேல் விரியுங் கதிரேபோல்வான். ... (14-6)

226. பொருத்தமுடைய நம்பி; புறம்போலுள்ளுங்கரியான்; அருத்தித் தாராகணங்களால் ஆரப்பெருகுவானம்போல் விருத்தம் பெரிதாய் வருவான். ... (14-7)

227. காட்டை நாடித் தேனுகனுங்களிறும் புள்ளுமுடன் மடிய வேட்டையாடிவருவான். ... (14-8)

## பெருமாள் திருமொழி

228. மாவினை வாய் பிளந்துகந்தமால்; வேலை வண்ணனென் கண்ணன்; வன்குன்றமேந்தி ஆவினையன் றுய்யக் கொண்ட வாயரேறு. ... (1-4)

229. ஏறடர்த்தான். ... (2-3)

230. தோய்த்த தண்டயிர் வெண்ணெய் பாலுடனுண்டலும் உடன்றுய்ச்சிகண்டு ஆர்த்த தோளுடை யெம்பிரான். ... (2-4)

231. வன்பேய் முலையுண்டவாயன். .... (3-4)

232. தாய்முலைப் பாலிலமுதிருக்கத்தவழ்ந்து தளர்நடையிட்டுச்சென்று பேய்முலை வாய்வைத்து நஞ்சையுண்டுபித்தனென்றே பிறரேச நின்றான். ... (6-4)

233. குன்றினால் குடைகவித்துக் கோலக்குரவை கோத்துக்குடமாடிக் கன்றினால் விளவெறிந்து காலால் காளியன் தலைமிதித்த வென்றிசேர் பிள்ளை.

234. வஞ்சமேவிய நெஞ்சுடைப் பேய்ச்சி யொன்று நார் நரம்பெழக் கரிந்துக்க நஞ்சமார்தருசுழிமுலை சுவைத்து அருள் செய்து வளர்ந்தான். ... (7-9)

235. கஞ்சன் நாள் கவர் கருமுகிலெந்தை. .... (7-10)

236. மல்லைமாநகர்க் கிறையவன் றன்னை வான் செலுத்திய மாயத்தெல்லையில் பிள்ளை. .... (7-11)

## திருச்சந்த விருத்தம்

237. இட்டிடைப் பின்னை கேள்வன். ... (13)

238. புள்ளின் வாய் பிளந்தான். ... (19)

239. பூணி பேணுமாயன். ... (26)

240. நன்னிறத் தொரின் சொலேழை பின்னைகேள்வன். .... (33)

241. கொம்பராவு நுண் மருங்குலாயர் மாதர்பிள்ளை. ... (35)

242. ஆடகத்த பூண்முலை யசோதையாய்ச்சி பிள்ளை; சாடுதைத்தோர் புள்ளதாவி கள்ளதாய பேய் மகள் வீடவைத்த வெய்ய கொங்கை ஐயபாலமுதுசெய்து ஆடகக்கை மாதர்வாயமுத முண்டான். ... (36)

243. காய்த்த நீள் விளங்கனி யுதிர்த்தெதிர்ந்த பூங்குருந்தம் சாய்த்து மாபிளந்த கைத்தலத்த கண்ணன், ஆய்ச்சி பாலையுண்டுமண்ணை யுண்டு வெண்ணெயுண்டு பின் பேய்ச்சி பாலையுண்டான். ... (37)

244. கடங்கலந்த வன்கரிமருப் பொசித்து ஓர் பொய்கைவாய் விடங் கலந்த பாம்பின் மேல் நடம்பயின்ற நாதன், குடங்கலந்த கூத்தனாய கொண்டல் வண்ணன். ... (38)

245. வெற்பெடுத்து மாரிகாத்த மேக வண்ணன். .... (39)

246. மையரிக்கண் மாதரார் திறத்து முன் ஆனையன்று சென்றடர்த்த மாயன். .... (40)

247. ஆயனாகியாயர் மங்கைவேய தோள் விரும்பினான், .... (41)

248. ஏறு சென்றடர்த்த வீசன். ... (42)

249. வெஞ்சினத்த வேழ வெண் மருப்பொசித்து உருத்தமா கஞ்சனைக் கடிந்த காலன், வஞ்சனத்து வந்த பேய்ச்சியாவி பாலுள் வாங்கினான், ... (43)

250. பொற்றையுற்ற முற்றல் யானை போரெதிர்ந்து வந்ததைப் பற்றி யுற்று மற்றதன் மருப்பொசித்த பாகன். .... (52)

251. மோடியோடிலச்சையாய சாபமெய்தி முக்கணான் கூடுசேனை மக்களோடு கொண்டுமண்டி வெஞ்சமத் தோட வாணனாயிரம் கரங்கழித்த ஆதிமால். ... (53)

252. மரங்கெட நடந்தடர்த்து மத்தயானை மத்தகத்து உரங்கெடப் புடைத்தோர் கொம்பொசித்துகந்தவுத்தமன்; துரங்கம் வாய் பிளந்தான், ... (58)

253. காலநேமிவக்கரன் கரன்முரன் சிரமவை காலனோடு கூட விற்குனித்த விற்கை வீரன். ... (59)

254. குந்தமோடு சூலம் வேல்கள் தோமரங்கள் தண்டுவாள் பந்தமான தேவர்கள் பரந்து வானகமுற வந்த வாணனீரைஞ்ஞூறு தோள்களைத் துணித்தான். ... (70)

255. வண்டுலாவு கோதை மாதர் காரணத்தினால் வெகுண்டு இண்ட வாணனீரைஞ்ஞூறு தோள்களைத் துணித்தான்; முண்ட னீறன் மக்கள் வெப்பு மோடியங்கி யோடிடக் கண்டு நாணி வாணனுக் கிரங்கினான். ... (71)

256. வாசியாகி நேசமின்றி வந்தெதிர்ந்த தேநுகன் நாசமாகி நாளுலப்ப நன்மைசேர்பனங்கனிக்கு வீசி மேல் நிமிர்ந்த தோளிலில்லை யாக்கினான். ... (80)

257. சாடுசாடுபாதன்; சலங்கலந்த பொய்கை வாய் ஆடரவின் வன்பிடர் நடம்பயின்ற நாதன். ... (86)

258. பார்மிகுத்த பாரமுன்னொழிச்சுவானருச்சுனன் தேர்மிகுத்து மாய மாக்கி நின்று கொன்று வென்றிசேர் மாரதர்க்கு வான் கொடுத்து வைபம்மைவர் பாலதாம் சீர்மிகுத்தவோர் தெய்வம்.... (89)

259. விடைக்குலங்களேழடர்த்து வென்றிவேற் கண் மாதரார் கடிக் கலந்த தோள் புணர்ந்த காலியாயன். ... (92)
260. தொறுக்கலந்தவூனமஃதொழிக்கவன்று குன்றமுன்பொறுத்தான். .... (106)
261. காய்சினத்த காசிமன்னன் வக்கரன் பவுண்டிரன் கேசிதேனுகன் நாசமுற்று வீழ நாள் கவர்ந்தான். ... (107)

## திருமாலை.

262. கற்றினம் மேய்த்தவெந்தை. ... (9)
263. மழைக்கன்று வரை முனேந்தும் மைந்தன். ... (36)
264. வளவெழுந்தவளமாட மதுரைமாநகரந் தன்னுள் கவளமால் யானை கொன்ற கண்ணன். .... (45)

## அமலனாதிபிரான்:

265. கோவலனாய் வெண்ணெயுண்டவாயன். ... (10)

## கண்ணிநுண் சிறுத்தாம்பு.

266. கண்ணிநுண் சிறுத்தாம்பினால் கட்டுண்ணப்பண்ணிய பெரு மாயன். ... (1)

முதலாயிரம் முற்றிற்று.

---

## (இரண்டாவதாயிரம்)

## பெரிய திருமொழி

267. இடிகொள் வெங்குரலின விடையடர்த்தவன். ... (1-2-3)
268. பெற்ற தாய் போல் வந்த பேய்ச்சி பெருமுலையூடு உயிரை வற்ற வாங்கி யுண்டவாயான். ... (1-3-1)
269. கானையாகிக் கன்று மேய்த்துக் குன்றெடுத்தன்று நின்றான். ... (1-3-4)
270. பேயிடைக்கிருந்து வந்த மற்றவள் தன் பெருமுலை சுவைத்திடப் பெற்ற தாயிடைக் கிருத்த லஞ்சுவனென்று தளர்ந்திட வளர்ந்த வென் தலைவன். ... (1-4-5)
271. தேரணங்கல்குல் செழுங்கயற்கண்ணி திறத்தொரு மறத்தொழில் புரிந்து பாரணங்கிமிலேறேழு முன்னடர்த்த பனிமுகில் வண்ணனெம்பெருமான். ... (1-4-6)
272. நண்ணார் முன் கடுத்தார்த் தெழுந்த பெருமழையைக் கல்லொன் றேந்தியின நிரைக்காத் தடுத்தான். ... (1-5-5)
273. தாயாய் வந்த பேயுயிரும் தயிரும் விழுதுமுடனுண்ட வாயான். ... (1-5-6)
274. விளங்கனி முனிந்தான். ... (1-6-7)
275. கொங்கலர்ந்த மலர்க்குருந்தமொசித்த கோவல னெம்பிரான்; பொங்கு புள்ளினை வாய் பிளந்த புராணர். ... (1--81)
276. வன்பேய்முலை பிள்ளையாயுயிருண்ட வெந்தை பிரான். ... (1-8-2)
277. நின்ற மாமருதிற்று வீழ நடந்த நின்மலன், நன்றி மாரி பொழிந் திடக் கடிதாநிரைக் கிடர் நீங்குவான் சென்று குன்றமெடுத் தவன். ... (1-8-3)

278. பார்த்தற்காயன்று பாரதங் கை செய்திட்டு வென்ற பரஞ்சுடர் கோத்தங் காயர்தம் பாடியில் குரவை பிணைந்த வெங்கோவலன். (1-8-4)
279. உறிமேல் நறுநெய்யமுதாகவுண்டான். ... (1-10-4)
280. மானேய் மடநோக்கி திறத்தெதிர்வந்த ஆனேழ் விடைசெற்ற அணிவரைத் தோளன். .... (1-10-7)
281. வேயினன்ன தோள் மடவார் வெண்ணெயுண்டானிவனென்று ஏச நின்ற எம்பெருமான். .... (2-2-1)
282. பின்னோர் தூது ஆதிமன்னர்க்காகிப் பெருநிலத்தார் இன்னார் தூதனென நின்றான். ... (2-2-3)
283. பந்தணைந்த மெல்விரலாள் பாவைதன் காரணத்தால் வெந்திறலே றேழும் வென்ற வேந்தன்; விரிபுகழ்சேர் நந்தன் மைந்தனாக வாகும் நம்பி நம்பெருமான. ... (2-2-4)
284. விற்பெருவிழவும் கஞ்சனும் மல்லும் வேழமும் பாகனும் வீழச் செற்றவன், பற்றலர் வீயக்கோல்கையிற் கொண்டு பார்த்தன் தன்தேர் முன்னின்றான். ... (2-3-1)
285. நந்தனார் களிறு. ... (2-3-2)
286. வஞ்சனை செய்யத் தாயுருவாகி வந்த பேயலறி மண்சேர நஞ்சமர் முலையூடுயிர் செகவுண்ட நாதன். ... (2-3-3)
287. அந்தமில் வரையால் மழை தடுத்தான். ... (2-3-4)
288. ஆயர் பாவை நப்பின்னை தனக்கிறை; பஞ்சபாண்டவர்க்காகி வாயுரை தூது சென்றியங்கு மென் துணை. ... (2-3-5)
289. இந்திரன் சிறுவன் தேர்முன் நின்றான். ... (2-3-6)
290. காண்டாவன மென்பதோர் காடமரர்க் கரையனது கண்டவன் நிற்க மூண்டாரழலுண்ண முனிந்தவன், மூன்னுலகம் பொறை தீர்த்தாண்டான். ... (2-4-3)
291. புலமன்னுவடம்புனை கொங்கையினாள் பொறைதீர முனாளடு வாளமரில் பலமன்னர் படச்சுடராழியினைப் பகலோன் மறையப் பணிகொண்டணிசேர் நிலமன்னனுமாயுலகாண்டவன். ... (2-4-3)
292. வென்றிகொள் வாளமரில் பாங்காக முனைவரொ டன்பளவிப் பதிற்றைந் திரட்டிப் படைவேந்தர் பட நீங்காச் செருவில் நிறைகாத்தவன். (2-4-4)
293. புகராருருவாகி முனிந்தவனைப் புகழ்வீட முனிந்துயிருண்டு அசுரன் நகராயின பாழ்பட நாமமெறிந்தான். .... (2-4-7)
294. பரிவாய் கீண்ட சீரான், போரானைக் கொம்பொசித்தபோரேறு, புணர் மருத மிற நடந்த பொற்குன்று. .... (2-5-1)
295. தொத்தார் சோலைக் காண்டவத்தைக் கனலெரிவாய்ப் பெய்வித் தான். ... (2-5-2)
296. அன்று பேய்ச்சி விடம் பருகுவித்தகன், கன்று மேய்த்து விளையாட வல்லான்,வரைமீகானில் தடம்பருகு கருமுகில், ... (2-5-3)
297. பேய்த்தாயை முலையுண்ட பிள்ளை; பிணைமருப்பிற் கருங்களிறு; பிணைமானுேக்கின் ஆய்த்தாயர் தயிர்வெண்ணெ யமர்ந்தகோ; குடமாடு கூத்தன்; கோகுலங்கள் தளராமல் குன்றமேந்திக் காத்தான். .... (2-5-4)

298. திரிசகடம் பாறி வீழப் பாய்ந்தான்: தூதிற் சென்றப் பொய்யறை வாய்ப் புகப்பெய்த மல்லர் மாளக் காய்ந்தான். .... (2-5-5)
299. படுமதத்த களிற்றின் கொம்பு பறித்தான். ... (2-5-6)
300. ஊணுகைப் பேய்முலை நஞ்சுண்டான். .... (2-5-7)
301. மருதிடை போனான். ... (2-5-10)
302. பஞ்சிச்சிறு கூழையுருவாகி மருவாத வஞ்சப் பெண் நஞ்சுண்ட வண்ணல்; முன்னணுகாத கஞ்சனைக் கடந்தவன். .... (2-6-7)
303. வெம்பு சினத்தடல் வேழம் வீழ வெண்மருப் பொன்று பறித்தவர். (2-8-3)
304. மஞ்சுயர் மாமணிக்குன்றமேந்தி மாமழை காத்தொரு மாயவானை யஞ்ச அதன்மருப்பன்று வாங்கும் ஆயர். ... (2-8-4)
305. அரவம் வெருவமுனநாள் பூம்புனல் பொய்கை புக்கான். .... (2-9-5)
306. பிறையுடைவாணுதல் பின்னை திறத்து முன்னே யொருகால் செருவி லுருமின் மறையுடை மால் விடையேழடர்த்தான். .... (2-9-9)
307. உறியார்ந்த நறுவெண்ணெ யொளியால் சென்றங்குண்டான், ஆய்ச் சியுர லோடார்க்கத் தறியார்ந்த கருங்களிறே போல நின்று தடங்கண்கள் பனிமல்குந்தன்மையான். .... (2-10-6)
308. இருங்கைம்மா கரிமுனிந்து பரியைக்கீறி இனவிடைகளேழடர்த்து மருதஞ் சாய்த்து வருஞ்சகடமிறவுதைத்து மல்லைப்பட்டு வஞ்சஞ்செய் கஞ்சனுக்கு நஞ்சானான். .... (2-10-7)
309. பாரேறு பெரும்பாரந் தீரப் பண்டு பாரதத்துத் தூதியங்கிப் பார்த்தன் செல்வத் தேரேறு சாரதியா யெதிர்ந்தார் சேனை செருக்களத்துத் திறலழியச் செற்றான். .... (2-10-8)
310. ஆயர் பூங்கொடிக் கினவிடை பொருதவன். .... (3-1-5)
311. அடல் மழைக்கு நிரை கலங்கிட வரை குடையெடுத்தவன். ... (3-1-8)
312. வேல்கொள் கைத்தலத்தரசர் வெம்போரினில் விசயனுக்காய் மணித்தேர் கோல் கொள் கைத்தலத்தெந்தை பெம்மான். ... (3-1-9)
313. மௌவல் குழலாய்ச்சிமென் தோள் நயந்தான். .... (3-2-7)
314. மாவாயினங்கம் மறியாது கீறி மழை மாமுது குன்றெடுத் தாயர் தங்கள் கோவாய் நிரை மேய்த்தான். ... (3-2-8)
315. வாடமரு திடைபோகி மல்லரைக் கொன்றொக்கலித்திட்டு ஆடல் நன்மாவுடைத்தாயராநிரைக் கன்றிடர் தீர்ப்பான் கூடிய மாமழை காத்த கூத்தன். ... (3-3-1)
316. பேய்மகள் கொங்கை நஞ்சுண்ட பிள்ளை. ... (3-3-2)
317. பண்டிவன் வெண்ணெயுண்டா னென்றுஆய்ச்சியர் கூடியிழிப்ப எண்டிசையோரும் வணங்கவிணைமருதூடு நடந்திட்டான். ... (3-3-3)
318. வளைக்கை நெடுங் கண்மடவாராய்ச்சியரஞ்சி யழைப்பத் தளைத் தவிழ் தாமரைப் பொய்கைத் தண்தடம்புக் கண்டார் காண முளைத்த வெயிற்றழல் நாகத்துச்சியில் நின்றது வாடத் திளைத்தமர் செய்து வருவான். ... (3-3-4)
319. உருவக் கருங்குழலாய்ச்சி திறத்தினமால் விடை செற்றுத் தெருவில் திளைத்து வருவான். ... (3-3-5)
320. மலங்கவரு மழை காப்பான் உய்யப் பருவரை தாங்கி யாநிரை காத்தான். ... (3-3-6)

| | |
|---|---|
| ஸரஸீருஹே | இரண்டு தாமரைப் பூக்களை |
| மதாத் | செருக்கினால் |
| ஸமவநம்ய | கீழ்ப்படுத்தி |
| உபரி | மேலே |
| ப்ரந்ருத்யத்— | நர்த்தனம் பண்ணுகின்ற |
| அளிபங்க்திநிபே | வண்டுகளின் வரிசைபோன் திருப்பவைகளான |

| | |
|---|---|
| ரங்கப்ருத: ப்ருவௌ | பெரியபெருமாளது திருப்புருவங்கள் |
| லோசநயோ: உபரி | திருக்கண்களின் மேலே |
| ஸவிலாஸ லாஸ்ய கதி (யதாததா) | விலாஸத்தோடு கூடின நடையழகை யுடைத்தாயிருக்கும் படி |
| ஸ்புரத: | விளங்காநின்றன. |

* * *—பெரியபெருமாளுடைய திருப்புருவவட்டங்களை யநுபவிக்கிறார். செந்தாமரை மலர்போன்ற திருக்கண்களின்மேல் கரியவண்டுகள் வரிசையாயிருப்பது போன்ற திருப்புருவங்கள் திகழ்வதைப்பார்த்தால் எங்ஙனே சொல்லலாம்படி யிருக்கின்றதென்றால், தாமரை மலரின் மதுவைக் கழுத்தே கட்டளையாகப் பருகி அதனாலுண்டான மதத்தினால் அத்தாமரைமலர்களைக் கீழ்ப்படுத்தி அவற்றின்மேல் நர்த்தநம் செய்கின்ற வண்டுகளோ இவை! என்னலாம்படி யிருக்கின்றதென்கிறார். திருப்புருவங்கள் சித்திரப்பதுமை யிலிருப்பதுபோல் அசையாமலிருப்பதன்றே பெரியபெருமாள் திருமுகமண்டலத்தில்; விலாஸ சேஷ்டிதங்களோடு கூடியிருக்குமாதலால் கூத்தாடுகின்ற வண்டுகளை உவமை கூறினார். "ஸவிலாஸ லாஸ்யகதி" என்பது க்ரியாவிசேஷணம். திருப்புருவங்களின் நிலைமையைச் சொன்னபடி. ... ... (96)

सरशरनलिनभ्रमान्नेत्रयोः परिसरनमदिक्षुचापच्छवि ।
युगमुदयति रङ्गभर्तुर्भ्रुवोः गुरुकुलमिव शार्ङ्गनृत्तश्रियः ॥९७॥

ஸ்மரசரநளிநப்ரமாந் நேத்ரயோ: பரிஸரநமதிக்ஷுசாபச்சவி,
யுகமுதயதி ரங்கபர்த்துர் ப்ருவோ: குருகுலமிவ சார்ங்கந்ருத்தச்ரிய:. (97)

| | |
|---|---|
| நேத்ரயோ: | திருக்கண்களிலே |
| ஸ்மரசர நலிந ப்ரமாத் | மந்மதபாணமாகிய பூக்களென்கிற ப்ரமத்தினால் |
| பரிஸர— | அவற்றின் ஸமீபத்திலே |
| நமத்— | வளைகின்ற |
| இக்ஷுசாப— | கரும்புவில்லினுடைய |
| ச்சவி | காந்திபோன்ற காந்தியை யுடைத்தான |

| | |
|---|---|
| ரங்கபர்த்து: ப்ருவோ: யுகம் | பெரியபெருமாளது இணைப் புருவங்கள் |
| சார்ங்க— | ஸ்ரீசார்ங்கவில்லினுடைய |
| ந்ருத்த ச்ரிய: | நர்த்தநலக்ஷ்மிக்கு |
| குருகுலம் இவ | ஆசார்யகுலம்போன்று |
| உதயதி | விளங்குகின்றன. |

* * *—மீண்டும் திருப்புருவங்களையே அநுபவிக்கிறார். திருவாய்மொழியில் *ஏழையராவியில் திருப்புருவங்களை அநுபவிக்குமிடத்து "மன்னியசீர் மதனன் கருப்புச் சிலைகொல்!, மதனன் தன்னுயிர்த்தாதை கண்ணபெருமான் புருவமவையே" என்ற அருளிச்செயலை அடியொற்றி அருளிச்செய்வதாம் இந்த ச்லோகம். கரும்புத்தடியை வில்லாகக்கொண்டவன் மன்மதன்; மன்மதனுடைய பஞ்சபாணங்களில் தாமரைமலரும் ஒன்று; திருக்கண்கள் தாமரைமலர்போன்றிருத்தலால் 'இவை மன்மதனுடைய அம்புகள்' என்றெண்ணி அவனது கரும்புவில்லானது ஸமீபத்தில் வளைந்துகிடக்கிறதோ! என்னலாம்படி யிருக்கிறதாம்.

நாச்சியார்திருமொழியில் "தன்கைச்சார்ங்க மதுவேபோல் புருவவட்டமழகிய" என்றருளிச்செய்ததைத் திருவுள்ளம்பற்றி "குருகுலமிவ சார்ங்க ந்ருத்தச்ரிய:" என்கிறார் உத்தரார்த்தத்தில். தனது திருக்கையிலுள்ள சார்ங்கமென்னும் வில்லானது விலக்ஷணமான நர்த்தன முடையதென்பது ப்ரஸித்தம்; அந்த நர்த்தநம் எங்கு அப்யஸிக்கப்பட்டது தெரியுமோ? இத்திருப்புருவவட்டங்களிடத்தில் தான் அப்யஸிக்கப்பட்டது; இவையே அதற்கு ஆசார்யகுலம் என்கிறார். ... ... (97)

कृपया परया करिष्यमाणे सकलाङ्गं किल सर्वतोऽक्षि नेत्रे ।
प्रथमं श्रवसी समास्तृणाते इति दैर्घ्येण विदन्ति रङ्गनेतुः ॥९८॥

க்ருபயா பரயா கரிஷ்யமாணே ஸகலாங்கம் கில ஸர்வதோக்ஷி நேத்ரே,
ப்ரதமம் ச்ரவஸீ ஸமாஸ்த்ருணுதே இதி தைர்க்யேண விதந்தி ரங்கநேது:. (98)

| | | | |
|---|---|---|---|
| பரயா க்ருபயா | சிறந்த க்ருபையினாலே | ப்ரதமம் | முந்துறமுன்னம் |
| ஸகல அங்கம் | எல்லா அவயவங்களையும் | ச்ரவஸீ | திருச்செவிகளை |
| ஸர்வத: | ஸகலாம்சத்தாலும் | ஸமாஸ்த்ருணுதே | அளாவுகின்றன |
| அக்ஷி | கண்ணாக | இதி | என்று |
| கரிஷ்யமாணே | பண்ணப்போகிறவைகளான | தைர்க்யேண | நீட்சியினால் |
| ரங்கநேது: நேத்ரே | பெரியபெருமாளது திருக்கண்கள் | விதந்தி | அறிகின்றனர். |

* * *—திருப்புருவங்களை யநுபவித்தபின் திருக்கண்களை யநுபவிக்கப்புகுந்து அவற்றின் நீட்சியை ஆச்சரியமாக வருணிக்கிறார். அமலனாதிபிரானில் "கரியவாகிப் புடைபரந்து மிளிர்ந்து செவ்வரியோடி நீண்டவப் பெரியவாய கண்கள்" என்றவிடத்து, அழகிய மணவாளப்பெருமாள் நாயனாருடைய வியாக்யானத்தில் இந்த ச்லோகத்தின் கருத்து விவரிக்கப்பட்டுள்ளது; அவ்விடத்து ஸ்ரீஸூக்திகள் பரமபோக்யமாயிருக்கையாலே அவற்றை இங்கு உதாஹரிப்போம்;—

"பெரியபெருமாளுடைய திருக்கண்களானவை திருச்செவியளவுஞ் செல்ல நீண்டிருக்கிறபடிக்கு ஒரு நினைவுண்டென்கிறார் பட்டர். அதாவது-பெரியபெருமாளுடையதிருக்கண்களானவை, மீனுக்குத் தண்ணீர் வார்ப்பாரைப்போலே நித்யஸூரிகளுக்கு முகங்கொடுத்துக் கொண்டிருக்கிற ஸ்ரீவைகுண்டநாதனுக்கும் கண்களிரண்டாய், ராம க்ருஷ்ணாத்யவதாரங்கள் பண்ணி குஹாதிகள் விதுராதிகள் தொடக்கமானார் சிலர்க்கு அல்பகாலம் முகங்கொடுத்து விஷயீகரித்து வந்தாப்போலே வெறுங்கையோடே போனவர்களுக்கும் கண்ணிரண்டாய், ஸம்ஸாரம் கிழங்கெடுத்தாலல்லது எழுந்திரேனென்று கோயிலிலே அர்ச்சாரூபியாய் அவ்வவர் நிகர்ஷங்களைப்பாராதே முகங்கொடுத்துக் கொண்டு கிடக்கிற பெரியபெருமாளுக்கும் கண் இரண்டாயிருக்கவோ? இவருடைய க்ருபையைப்பார்த்தால் உடம்பெல்லாம் கண்ணாக வேண்டாவோவென்று பார்த்து,— எல்லா மண்டலங்களும் தங்களுக்கே ஆகவேணுமென்றிருக்கும் ராஜாக்கள் முற்படத் தங்களுக்கு ப்ரத்யாஸந்நரான வன்னியரை அழியச்செய்யுமாபோலே பெரியபெருமாளுடைய அவயவாந்தரங்களடைய நாமே யாகவேணுமென்று; பார்ச்வஸ்தங்களாயிருக்கிறன திருச்செவிகளாகையாலே அவற்றை வென்று அவ்வருகே போவதாக முற்பட்டு அவற்றுடனே அலையெறிகிறாப்போலே யாய்த்துத் திருக்கண்கள் செவிகளளவும் நீண்டிருக்கிறபடி."

உள்ளுள்ள பரமக்ருபையை வெளியிடுவன திருக்கண்களேயாம்; பரமபதநாதனுடைய க்ருபை அதிகமா? விபவாவதாரங்களான ராமக்ருஷ்ணாதிகளின் க்ருபை அதிகமா? அர்ச்சாரூபியான பெரியபெருமாளுடைய க்ருபை அதிகமா? என்று ஆராயப் புகுந்தால், நிஷ்பங்காதிகாரிகளான நித்யமுக்தர்களுக்கே காட்சி தருகின்ற பரமபதநாதனுடைய க்ருபை அவ்வளவு சிறந்ததன்று; ஸ்வல்பகாலம் இந்நிலவுலகத்தில் அவதரித்திருந்து மஹாத்மாக்களை விஷயீகரித்துத் தன்னடிச்சோதிக் கெழுந்தருளின ராமக்ருஷ்ணாதி விபவமூர்த்திகளின் க்ருபை பரமபதநாதனுடைய க்ருபையிற்காட்டிலும் சிறந்தது; 'இக்கொடிய ஸம்ஸாரம் வேரற்றாலன்றி உபயகாவேரீ மத்யத்தைவிட்டு எழுந்திருப்பதில்லை' என்று ஸங்கல்பித்துக்கொண்டு *ஸர்வஸஹிஷ்ணுரர்ச்சக பராதீநாகிலாத்மஸ்திதி:* என்கிறபடியே மிகவுமெளியராய் ஸ்தாவர ப்ரதிஷ்டையாய்க் கிடக்கும் பெரிய பெருமா

ளுடைய க்ருபை மிகவும் சிறந்தது; ஆக, அதம மத்யம உத்தமர்களான இம்மூர்த்தி களுக்கு க்ருபையில் வாசியிருப்பதுபோல் க்ருபாஸஂசகங்களான திருக்கண்களிலும் வாசி அவசியமிருக்கவேண்டும். பரமபதநாதனுக்கும் இரண்டு கண்கள், ராமக்ருஷ்ணாதி களுக்கும் இரண்டு கண்கள், பெரிய பெருமாளுக்கும் இரண்டு கண்கள் என்று இங்ஙனே வாசியற்றுத் துல்யமாயிருப்பது க்ருபையின் பெருமைக்குப் பொருந்தாது; பெரிய பெருமாளுக்கு இரண்டு திருக்கண்களிருந்தால் ராமக்ருஷ்ணாதிகளுக்கு ஒரு கண்ணே இருந்திருக்கவேண்டும்; அதிலும் பாதிதான் பரமபதநாதனுக் கிருக்கவேண்டும். மூவர்க்கும் இரண்டே கண்களாயிருப்பது தகாது தகாது; பெரியபெருமாளுடைய ஒப்பற்ற பரமக்ருபைக்குத் தகுதியாக எப்படியிருக்கவேணுமென்றால் திருமேனிமுழுதும் திருக் கண்ணாகவே யிருக்கவேண்டும்—என்றிப்படி திருக்கண்களுக்குக் கருத்து உண்டாகி 'எல்லா அவயவ ஸ்தானங்களையும் நாம் ஆக்ரமித்து விடவேண்டும்' என்று அறுதியிட்டு முந்துறமுன்னம் அருகிலுள்ள திருச்செவிகளின் ஸ்தானத்தை ஆக்ரமிக்க முயல்வதாக தோன்றுகின்றது அவற்றின் நீட்சியைப் பார்க்குமளவில்—என்றாராயிற்று.

நேத்ரே—ப்ரதமா த்விவசநம்; 'கரிஷ்யமாணே' என்பது இதற்கு விசேஷணம். 'அக்ஷி' என்பது ஸகலாங்கபதத்துக்கு விதேயவிசேஷணம். ... (98)

श्रवोनासारोधातदवधिकडोलायितगते विशालस्फीतायद्रुचिरशिशिराताम्रधवले ।
मिथो बद्धस्पर्धस्फुरितशफरद्वन्द्वललिते क्रियास्तां श्रीरङ्गप्रणयिनयनाब्जे मयि दयाम् ॥९९॥

ச்ரவோநாஸாரோதாத் ததவதிகடோலாயிதகதே
விசாலஸ்பீதாயத்ருசிரசிசிராதாம்ரதவலே,
மிதோபத்தஸ்பர்த்தஸ்புரிதசபரத்வந்த்வலலிதே
க்ரியாஸ்தாம் ஸ்ரீரங்கப்ரணயிநயநாப்ஜே மயி தயாம். (99)

| | | | |
|---|---|---|---|
| ச்ரவோ நாஸா ரோதாத் | திருச்செவி திருமூக்கு இவற்றின் தகைவினால் | மித: பத்த ஸ்பர்த்த- | பரஸ்பரம் சண்டையிடுகிற |
| தத்அவதிக டோலாயிதகதே | அவ்விரண்டு அவயவங்களள வாகச்சுழலமிடாநின்றவை களாய் | ஸ்புரித— | துடிக்கின்ற |
| விசால— | விசாலங்களாய் | சபர த்வந்த்வ— | இரண்டு கெண்டை மீன்கள் போலே |
| ஸ்பீத— | ப்ருஹத்துக்களாய் | லலிதே | மநோஹரங்களான |
| ஆயத— | நீண்டவைகளாய் | ஸ்ரீரங்க ப்ரணயி நயந அப்ஜே | பெரியபெருமாளது திருக்கண் தாமரைகள் |
| ருசிர— | அழகியவைகளாய் | மயி | அடியேன்பால் |
| சிசிர— | குளிர்ந்தவைகளாய் | தயாம் | திருவருளை |
| ஆதாம்ர தவளே | சிறிது சிவந்து வெளுத்தவை களாய் | க்ரியாஸ்தாம் | செய்யக்கடவன. |

* * *—பெரியபெருமாளுடைய புடைபரந்து மிளிர்ந்து நீண்ட திருக்கண்கள் பாவியேனையும் கடாக்ஷித்தருள வேணுமென்கிறார். இத்திருக்கண்கள் எங்ஙனே யிருக்கின்றனவென்றால், [ச்ரவோநாஸாரோதாத் ததவதிகடோலாயிதகதே.] இத்திருக்கண்களானவை ஒரு எல்லையிலே நில்லாமல் எங்கும் பரம்பவேணுமென்று பாரிப்புடையன வாயினும் ஒருபக்கத்தில் திருமூக்கும் மற்றொருபக்கத்தில் திருச்செவிகளும் தடையாக நிற்பதனால் அவற்றையழித்து அவ்வருகே செல்லமாட்டாமல் அவற்றினிடையே சுழலமிட்டு உலாவுகின்றனவாம்; அவ்விரண்டு அவயவங்களையும் மீறி அப்பால் செல்லவேணுமென்னுங் கருத்து கண்களுக்கு உண்டென்பது "டோலாயிதகதே" என்பதில் தோன்றும். இன்னமும் போக்கிலே ஒருப்பாடிருக்கிறபடி. இந்தப்பக்கமாகப் போவோமென்று ஒரு பக்கத்தில் வந்தால் திருமூக்கு தடைசெய்கின்றது; அதனால் திரும்பி அந்தப்பக்கமாய்ப் போகப்பார்த்தால் திருச்செவி தடைசெய்கின்றது; அதனால் மறு

படியும் இந்தப்பக்கமாய்த் திரும்புகின்றது. ஆக இப்படியே போக்குவரத்து ஓய்ர் திருக்கிறதாய்த்து.

[விசாலஸ்பீதேத்யாதி.] "கரியவாகிப் புடைபரந்து மிளிர்ந்து செவ்வரியோடி நீண்டவப் பெரியவாயகண்கள்" என்ற திருப்பாணுழ்வார் பாசுரத்தின் அநுஸந்தாநம் உள்ளுச்செல்லுகிறதென்க. திருக்கண்களின் இயற்கையாய்ப் பெரும்பான்மையான நிறம் நைல்யமாதலால் அது இங்குச்சொல்லப்படவில்லை. சிறிது சிவந்தும் சிறிது வெளுத்து மிருக்கையாகிற நிறச்சிறப்பு இங்குச்சொல்லப் பட்டது.

[மிதோபத்தஸ்பர்த்தேத்யாதி.] திருமூக்கின் இரண்டருகிலும் திருக்கண்கள் செருக்கிமிளிர்வதை நோக்குங்கால் இரண்டு கெண்டைமீன்கள் தம்மிலே பொருமை கொண்டு சண்டையிடுவனபோன்றுள்ளன வென்கிறுர்.

இப்படிப்பட்ட திருக்கண்தாமரைகள் அடியேனமீது இரங்கியருளவேணு மென்றுராயிற்று. ... ... ... (99)

करुणामृतकूलमुद्वहैषा प्रणमत्स्वागतिकी प्रसन्नशीता ।
मयि रङ्गधनोपकर्णिकाऽक्ष्णोः सरितोर्वीक्षणवीचिसन्ततिः स्तात् ॥१००॥

கருணும்ருதகூலமுத்வஹைஷா ப்ரணமத்ஸ்வாகதிகீ ப்ரஸந்நசீதா,
மயி ரங்கதநோபகர்ணிகாக்ஷ்ணோः ஸரிதோர் வீக்ஷணவீசிஸந்ததிஸ் ஸ்தாத். 100

| | | | |
|---|---|---|---|
| ஹேரங்கதந ! | திருவரங்கமாநகர்க்குச் செல்வம் போன்றுள்ள பெரியபெருமாளே !, | உபகர்ணிகா | திருச்செவியளவும் வியாபிக்குமதாய் |
| கருணு அம்ருத கூல முத்வஹா | கருணையாகிய அமுதம் நிரம்பியதாய் | ஏஷா | ஆகவிப்படி விலக்ஷணமாயிருக்கின்ற |
| ப்ரணமத் ஸ்வாகதிகீ | வந்து பணிகின்றவர்களை ஆதரவோடு ஏற்றுக் கொள்ளுமதாய் | அக்ஷ்ணோः ஸரிதோः வீக்ஷண வீசி ஸந்ததிः | திருக்கண்களாகிற நதிகளின் கடாக்ஷங்களாகிற அலை வரிசையானது |
| ப்ரஸந்ந சீதா | தெளிவும் குளிர்ச்சியும் பொருந்தியதாய் | மயி ஸ்தாத் | அடியேன்மீது ஆகவேணும். |

* * *—பெரியபெருமாளுடைய இரண்டு திருக்கண்களும் இரண்டு பெருக்காறுகளாம்; அவற்றில் நின்றும் உண்டாகின்ற கடாக்ஷபாதங்கள் அலைவரிசைகளாம்; அவை அடியேன் மீது பாயவேணும் என்கிறுர். அந்த அலைவரிசை எப்படிப்பட்டதென்னில் திருவருளாகிற அமுதப்புனலை நிரம்பக்கொண்டிருக்கின்றது; அடிபணிய வருமவர்களை வாருங்கள் ! வாருங்கள் !, என்று ஆதரித்து அழைக்கின்றது; கலக்கமொன்றுமின்றியே தெளிந்து குளிர்ந்திருக்கின்றது. [உபகர்ணிகா] காசியில் கங்காநதியில் பலபல தீர்த்த கட்டங்களுண்டு; 'மணிகர்ணிகாகாட் என்று ஒன்றுக்குப் பெயர்; அப்படியே இதற்கு 'உபகர்ணிகா' என்று பெயரிடலாம் போலுமென்கிறுர். கர்ணமூல ஸமீபத்திலே உலாவுவதென்றவாறு.

ஸ்வாகதிகீ='நல்வரவா?' என்று கேட்பது என்கை. ... (100)

विलसति नासा कल्पकवल्ली मुग्धेव रङ्गनिलयस्य ।
स्मितमपि तन्नवकुसुमं चुबुककपोलं च पल्लवोल्लसितम् ॥१०१॥

விலஸதி நாஸா கல்பகவல்லீ, முக்தேவ ரங்கநிலயஸ்ய,
ஸ்மிதமபி தந்நவகுஸுமம் சுபுககபோலஞ்ச பல்லவோல்லஸிதம். 101

| | | | |
|---|---|---|---|
| ரங்கநிலயஸ்ய | பெரிய பெருமாளுடைய | நத் நவகுஸுமம் இவ | அக்கற்பகக் கொடியின் புதிய மலர் போலவும் |
| நாஸா | திருமூக்கானது | சுபுக கபோலம் | மோவாயும் கபோலங்களும் |
| முக்தா | அழகிய | பல்லவ உல்லஸிதம் இவ ச | தளிர்வடிப்புப் போலவும் |
| கல்பகவல்லீ இவ | கற்பகக்கொடிபோன்று | | |
| விலஸதி | விளங்குகின்றது. | | |
| ஸ்மிதம் அபி | புன்முறுவலோவென்றால் | விலஸதி | விளங்குகின்றது. |

* * *—திருமூக்கு, மந்தஸ்மிதம், மோவாய், கபோலம் ஆகிய இந்நான்கையும் சேர்த்து அநுபவிக்கிறாரிதில் "ஈட்டிய வெண்ணெயுண்டான் திருமூக்கு—மாட்டுயர் கற்பகத்தின் வல்லியோ!" என்ற ஆழ்வாரருளிச்செயலை அடியொற்றிப் பெரியபெருமாளுடைய திருமூக்கைக் கற்பகக்கொடியாக வருணித்தார் பூர்வார்த்தத்தில். [ஸ்மிதமபி தந் நவகுஸுமம்] புன்முறுவலை நோக்குங்கால் அக்கற்பகக்கொடியில் அப்போதலர்ந்த செவ்விப்பூவோ இது! என்னலாம்படியிருக்கும். [சுபுககபோலஞ்ச பல்லவோல்லஸிதம்.] மோவாயையும் கபோலங்களையும் நோக்குங்கால் அக்கற்பகக்கொடி தளிர்வடித்தனவோ! என்னலாம்படியிருக்கும்; கீழ் (68) "கஸிதிகமல நிவாஸா" என்னும் ச்லோகத்தில் ஸ்ரீரங்கநாதனை ஒரு கல்பவ்ருக்ஷமாக ரூபித்தருளினர். அதில் கொடியும் தளிரும் மலரும் நிரம்பியிருக்கும்படியை இந்த ச்லோகத்தினால் நிரூபித்தாராயிற்று. ப்ராண்யங்கமாகையாலே 'சுபுககபோலம்' என்று ஏகவத்பாவம். ... ... (101)

नयनशफरविद्धौ कर्णपाशावरुद्धौ रुष इव लुठतोऽर्चिर्मञ्जरीरुद्गिरन्तौ ।
परिमिलदलकालीशैवलामंसवेलाम् अनु मणिमकरोद्धौ रङ्गधुर्यामृताब्धेः ॥१०२॥

நயநசபரவித்தௌ கர்ணபாசாவருத்தௌ
ருஷ இவ லுடதோர்ச்சிர்மஞ்ஜரீருத்கிரந்தௌ,
பரிமிலதலகாலீசைவலாமம்ஸவேலாம்
அநுமணிமகரோத்கௌ ரங்கதுர்யாம்ருதாப்தே:. 102

| | | | |
|---|---|---|---|
| ரங்கதுர்ய அம்ருத அப்தே: | பெரிய பெருமாளாகிற அமுதக் கடலினுடைய | ருஷ: | (கீழ்ச்சொன்ன இரண்டு காரியங்களினுலுமுண்டான) கோபத்தினால் |
| பரிமிலத் அலக ஆலீ சைவலாம் | சுற்றிலும் தொங்குகின்ற திருக்குழல்களாகிற வேலம் பாசியை யுடைத்தான | அர்ச்சிஸ் மஞ்ஜரீ: | பூங்கொத்துக்கள்போலிருக்கிற தேஜஸ்ஸுகளை |
| அம்ஸவேலாம் அநு | திருத்தோள்களாகிற கரையினருகில் | உத்கிரந்தௌ இவ (ஸ்திதௌ) | கக்குகின்றனபோலிருப்பவைகளான |
| நயந சபர வித்தௌ | திருக்கண்களாகிற மீன்களாலே அடிக்கப்பட்டனவாய் | மணி மகர ஊத்கௌ | சிறந்த ரத்ன மகர குண்டலங்கள் |
| கர்ண பாச அவருத்தௌ | திருச்செவிகளாகிற வலைக் கயிற்றினால் பிடிக்கப்பட்டனவாய் | லுடத: | தளதளவென்று விளங்குகின்றன. |

* * *—தோளளவும் தளதளென்று திருச்செவிகளில் தொங்குகின்ற திருமகரக் குழைகளை அநுபவிக்கிறாரிதில். ரூபகாலங்காரமே இதில் நிரம்பியிருக்கும். திருக்காதணிகள் சுறாமீன் வடிவாக அமைந்திருக்குமிறே. அவ்வணிகளை இரண்டு சுறாமீன்களாகவே திருவுள்ளம் பற்றுகிறார். மீன்கள் கடற்கரையிலே புரளும். இவையும் கடற்கரையிலே புரள்கின்றனவென்கிறார். இங்குக்கடலாவது எது? கரையாவது எது? என்னில்; பெரிய பெருமாளே ஒரு அமுதக்கடல்; திருத்தோள்கள் அக்கடலின் கரை. கரையில் கறுத்த பாசிகள் அடர்ந்திருப்பது போல் இங்கும் "களிவண்டெங்கும் கலந்தாற்போல் கமழ் பூங்குழல்கள் தடந்தோள்மேல் மிளிரநின்று" என்றாற்போலே திருக்குழல்கள் படிந்

திருப்பதனால் திருக்தோள்களைக் கரையென்றது மிகப்பொருந்தும். உலகத்தில் எவர்க்கும் ஒரு ரோஷம் உண்டானால் கோபாக்கிநியை வெளிப்படுத்துவது இயல்பு. இக்கர்ண பூஷணங்களாகிற சுறுமீன்களும் ரோஷத்தினால் தேஜோமஞ்ஜரிகளை வெளிப்படுத்தின போலிருக்கின்றதாம் தளதளென்று பிரகாசிப்பது. இவற்றுக்கு ரோஷமுண்டாக வேண்டிய காரணமேதென்னில்; இவற்றுக்கு இரண்டு வருத்தங்கள் நேர்ந்தனவென்கிறார் [நயநசபரவித்தௌ கர்ணபாசாவருத்தௌ] என்று. அதாவது—திருக்கண்களாகிற இரண்டு மீன்களாலே இவை அடிபட்டனவாம்; அன்றியும் திருச்செவிகளாகிற பாசத்தினால் பிடிபட்டனவாம். இங்ஙனேயானால் ஏன் கோபமுண்டாகாது? ஒருமீனை மற்றொரு மீன் அடித்து வெல்லுவதுண்டாகையால் கர்ணபூஷணங்களாகிற மீனைத் திருக்கண்களாகிற மீன்கள் புடைத்து விட்டன; ஓடிப்போக வொண்ணுதபடி. திருச்செவிகளாகிற வலைக்கயிறுகள் ஆக்ரமித்துக்கொண்டன; இவ்விரண்டாலும் கோபம் அதிகரித்ததனால் "அர்ச்சிர்மஞ்ஜரீ ருத்கிரந்தௌ" என்னும்படியாயிற்று. இதன் கருத்தாவது—மகர குண்டலங்களானவை கர்ணாந்த விச்ராந்தங்களான திருக்கண்களில் அழுக்கும் ப்ரகாசகங்களாய்த் திருச்செவிகளிலே பொருந்தி ஜ்வலிக்கின்றன வென்கை.

மணிமகரௌ த்கௌ = உத்கசப்தம் ச்ரேஷ்டவாசகம். ... (102)

अधरमधुराम्भोजं तत्कर्णपाशमृणालिकावलयमपि मामास्तां रङ्गेन्दुवक्त्रसरश्चिरम् ।
नयनशफरं नासाशैवालवल्लरि कर्णिकामकरमलकश्रेणीपर्यन्तनीलवनावलि ॥१०३॥

அதரமதுராம்போஜம் தத்கர்ணபாசம்ருணாளிகா-
வலயமபி மாமாஸ்தாம் ரங்கேந்துவக்த்ரஸரச் சிரம்,
நயநசபரம் நாஸாசைவாலவல்லரி கர்ணிகா-
மகரம் அலகச்ரேணீபர்யந்தநீலவநாவலி. (103)

| | | | |
|---|---|---|---|
| அதர-மதுர அம்போஜம் | திருப்பவளமாகிற போக்யமான தாமரைப்பூவை யுடைத்தாயும் | அலகச்ரேணீ-பர்யந்த நீல வந ஆவலி | திருக்குழல்கற்றையாகிற அருகிலிருக்கக் கூடிய கறுத்த சோலைகளை யுடைத்தாயுமிருக்கிற |
| கர்ணபாச-ம்ருணாளிகா வலயம் | திருச்செவிமடல்களாகிற தாமரைக்கொடி வளையல்களை யுடைத்தாயும் | தத் | பரமவிலக்ஷணமான |
| நயந-சபரம் | திருக்கண்களாகிற மீன்களையுடைத்தாயும் | ரங்கேந்து வக்த்ர ஸர: | பெரிய பெருமாளுடைய திருமுக மண்டலமாகிற தடாகமானது |
| நாஸா-சைவால வல்லரி | திருமூக்காகிற பாசிக்கொடியையுடைத்தாயும் | சிரம் | நெடுநாளளவும் |
| கர்ணிகாமகரம் | கர்ண பூஷணங்களாகிற மகரங்களை யுடைத்தாயும் | மாம் அபி | என்னை நோக்கி |
| | | ஆஸ்தாம் | இருக்கவேணும். |

***—பெரிய பெருமாளுடைய திருமுகமண்டலத்தை ஒரு தடாகமாக அநுபவிக்கிறார். தடாகத்திலுள்ள வஸ்துக்கள் இங்குண்டோவென்ன, உண்டென்று நிரூபிக்கிறார் பல விசேஷணங்களினால். பெரிய பெருமாளுடைய திருப்பவளமே தேன் நிறைந்த தாமரைப்பூ; பாசம்போன்ற திருச்செவிகள் தாமரைக் கொடிவளையங்கள்; திருக்கண்கள் மீன்கள்; திருமூக்கு வேலம்பாசிக்கொடி; கர்ணபூஷணங்கள் மகரங்கள்; தடாகத்தின் அருகே சோலைகள் இருக்குமே; திருக்குழல் கற்றையே அது; ஆக இவ்வகைகளாலே ஒரு தடாகமென்ன வமைந்த திருமுக மண்டலமானது எப்போதும் அடியேன் பக்கலிலேயே பக்ஷபாதங் கொண்டிருக்கவேணு மென்றாராயிற்று. ... (103)

रमयतु स मां कण्ठः श्रीरङ्गनेतुरुदञ्चितक्रमुकतरुणग्रीवाकम्बुप्रलम्बमलिम्लुचः ।
प्रणयविलगल्लक्ष्मीविश्वंभराकरकन्दलीकनकवलयक्रीडासंक्रान्तरेख इवोल्लसन् ॥१०४॥

ரமயது ஸ மாம் கண்டஃ ஸ்ரீரங்கநேதுருதஞ்சித—
க்ரமுகதருணக்ரீவாகம்புப்ரலம்பமலிம்லுசஃ,
ப்ரணயவிலகல்லக்ஷ்மீவிச்வம்பராகரகந்தலீ—
கநகவலயக்ரீடாஸங்க்ராந்தரேக இவோல்லஸந். 104

| | | | |
|---|---|---|---|
| ஸ்ரீரங்கநேது: | பெரிய பெருமாளுடைய,— | கர கந்தலீ— | வாழைத்தண்டு போன்ற திருக்கைகளிலுள்ள |
| உதஞ்சித— | செழித்து வளர்ந்த பாக்கு | கநக வலய— | பொன்வளைகளில் நின்றும் |
| க்ரமுக தருண | மரத்தினுடைய இளங்கழுத் | க்ரீடா ஸங்க்ராந்த ரேக: இவ | விளையாட்டாக வந்து சேர்ந்த ரேகைகளையுடையது போல் |
| க்ரீவா கம்பு | தென்ன, சங்கென்ன | உல்லஸந் | விளங்குகின்றதாயுமிருக்கிற |
| ப்ரலம்ப மலிம்லுச: | இவற்றின் அழகைக் கொள்ளை கொண்டதாயும், | ஸ: கண்ட: | விலக்ஷணமான திருக்கழுத்தானது |
| ப்ரணய— | அன்போடு | மாம் | அடியேனை |
| விலகத்— | ஆலிங்கனஞ் செய்துகொள்ளுகிற | ரமயது | மகிழ்விக்கவேணும். |
| லக்ஷ்மீ— | திருமகளென்ன | | |
| விச்வம்பரா— | நிலமகளென்ன இவர்களுடைய | | |

* * *—ஈரிரண்டு ச்லோகங்களில் அமுதக்கடலின் அநுபவமும் பொய்கையின் அநுபவமும் நிகழ்ந்தது; கடலில் தோன்றிய சங்கின் அநுபவமும் பொய்கைக்கரைகளில் விளங்கும் பாக்கு மரத்தின் அநுபவமும் நிகழ்கின்றது இந்த ச்லோகத்தில். கழுத்தில் மூன்று ரேகைகளிருப்பது உத்தமலக்ஷணமாக வருணிக்கப்படும். அதற்குப் பாக்குமரத்தின் கழுத்துப்பாகத்தையும் சங்கத்தையும் உவமை கூறுவது கவிஸம்ப்ரதாயம்; இவை மிகப்பொருந்திய உபமாநங்களாம். அவற்றையே இங்குத் திருவுள்ளம் பற்றுகிறார் பூர்வார்த்தத்தில்.

[ப்ரணயவிலகத் இத்யாதி.] பெரிய பெருமாளுடைய திருக்கழுத்தில் இயற்கையாகவே ரேகைகள் இருந்தாலும் புத்திசமத்காரத்தாலே ஹேதூத்ப்ரேக்ஷை பண்ணுகிறார். திருமடந்தை மண்மடந்தைகளோடு கூடி நிரந்தராச்லேஷரஸம் அநுபவிக்கும் போது அப்பிராட்டிமாருடைய திருக்கைகளி லணியப்பட்டுள்ள பொன் வளைகள் திருக்கழுத்திலே உறுத்தி அதன் அடையாளமாகத் தான் இந்த ரேகைகள் உண்டாயினவோ! என்னலாம்படி யிருக்கின்றதென்கிறார். ... ... (104)

अधिष्ठानस्तम्भौ भुवनपृथुयन्त्रस्य कमलाकरेणोरालाने अरिकरिघटोन्माथमुसलौ ।
फणीन्द्रस्फीतस्रग्व्यतिकरितसन्दिग्धविभवौ भुजौ मे भूयास्तामभयमभि रङ्गप्रणयिनः ॥१०५॥

அதிஷ்டாநஸ்தம்பௌ புவநப்ருதுயந்த்ரஸ்ய, கமலா
கரேணோராலாநே அரிகரிகடோந்மாதமுஸலௌ,
பணீந்த்ரஸ்பீதஸ்ரக்வ்யதிகரிதஸந்திக்தவிபவௌ,
புஜௌ மே பூயாஸ்தாமபயமபி ரங்கப்ரணயிநஃ. 105

| | | | |
|---|---|---|---|
| புவந ப்ருது யந்த்ரஸ்ய | உலகமாகிற ஒரு பெரிய யந்திரத்திற்கு | ஆலாநே | கட்டுத்தறியாயுள்ளவையும் |
| அதிஷ்டாந ஸ்தம்பௌ | ஆதாரத் தூண்களாயிருப்பவையும் | அரி கரி கடா உந்மாத முஸலௌ | சத்துருக்களாகிற யானைக் கூட்டங்களை முடிப்பதில் உலக்கையாயுள்ளவையும் |
| கமலா கரேணோ: | பிராட்டியாகிற யானைப் பேடைக்கு | பணீந்த்ர— | ஆதிசேஷனுடைய திருமேனியென்ன |

ஸ்பீத ஸ்ரக்— பருத்த புஷ்பமாலையென்ன (இவற்றினுடைய)
வ்யதிகரித— சேர்க்கையை யுடையவைகளும் (இவற்றுள் புஜங்கள் எவை என்று)
ஸர்திக்த— ஸர்தேஹிக்கத்தக்க
விபவௌ { பெருமையை உடையவைகளு மான

ரங்கப்ரணயிந: புஜௌ { பெரிய பெருமாளது புஜங்க ளானவை
மே அடியேனுக்கு
அபயம் அபி பூயாஸ்தாம் } அபயமளிக்கக்கடவன.

* * *—பெரிய பெருமாளுடைய மஹா புஜங்களைப் பற்றி நாம் அச்சங்கெட்டு வாழக்கடவோ மென்கிறார். இந்த புஜங்கள் எங்ஙனே சொல்லலாம்படியிருக்கின்றன வென்றால், [புவநப்ருதுயந்த்ரஸ்ய அதிஷ்டாநஸ்தம்பௌ] சேதநா சேதநாத்மகமான ஸகல லோகங்களாகிற ஒரு பெரிய யந்த்ரத்தைத் தாங்குவதற்கு அமைந்த தூண்களோ இவை என்னலாம். *பாஹூச் சாயாமவஷ்டப்தோ யஸ்ய லோகோ மஹாத்மந:* என்னக் கடவதிறே. [கமலாகரேணோ: ஆலாநே.] பிராட்டியாகிற யானைப் பேடையைப் புறம்புபோக வொண்ணாமே கட்டிவைப்பதற்குரிய கட்டுத்தறி யென்னலாம். திருக்கையாகிற தாமரையை விட்டுப் பிரியாளிறே தாமரையாள். "ஆலாநாவரிகரி" என்றே பாடம் வழங்கி வருகின்றது; அப்பாடத்தின்படி 'ஆலாநௌ' என்று பதவிபாகமாகும், அமர கோசம் முதலிய நிகண்டுகளில் ஆலாநசப்தம் நபும்ஸக லிங்கமாகவே படிக்கப்பட்டிருப்பதால் 'ஆலாநே' என்கிற முன்னோர் பாடமே இங்குக் கொள்ளப்பட்டது. ஏகாராந்தத்விவசந மரகையாலே ப்ரக்ருதிபாவ மென்றுணர்க.

[அரி கிரிகடோர்மாத முஸலௌ] இரண்டு திருக்கைகளும் இரண்டு உலக்கைக ளென்னலாம். பிராட்டியின் நித்யாநுபவத்திற்கு இடையூறாக வரும் ராவணாதி ராக்ஷஸர்களாகிற சத்ருஸமூஹங்களைத் தொலைக்கவல்ல உலக்கைகளென்கிறார். [பணீந்த்ரேத்யாதி] திருவனந்தாழ்வான் மீது பள்ளி கொண்டிருப்பதனாலும், பெரிய திருத்துழாயலங்கல் அணிந்துகொண்டிருப்பதனாலும், அத்திருவனந்தாழ்வானுடைய திருமேனி போலவும் திருமாலை போலவும் வடிவுபூண்டு விளங்குகின்ற திருக்கைகளைக் கண்டால் 'இன்னது திருக்கை, இன்னது திருமாலை இன்னது ஆதிசேஷனுடல்' என்று நிச்சயித்தறிய வொண்ணாமே ஸம்சயிக்க வேண்டியிருக்குமிறே. திரண்டுருண்டு நீண்டு மெத்தென்றிருக்குந் தன்மையை வர்ணித்தபடி." *பாஹூம் புஜகபோகாபம்* என்ற ஸ்ரீராமாயண ச்லோகமுங் காண்க.

இப்படிபட்ட புஜங்களை நோக்கியிறே 'அஞ்சேலென்று கை கவியாய்' என்ன ப்ராப்தம். ... ... ... ... (105)

प्रतिजलधितो वेलाशय्यां विभीषणकौतुकात् पुनरिव पुरस्कर्तुं श्रीरङ्गिणः फणिपुङ्गवे ।
समुपदधतः कञ्चित्कञ्चित्प्रसारयतो भुजद्वयमपि सदा दानश्रद्धालु दीर्घमुपास्महे ॥१०६॥

ப்ரதிஜலதிதோ வேலாசய்யாம் விபீஷணகௌதுகாத்
புநரிவ புரஸ்கர்த்தும் ஸ்ரீரங்கிண: பணிபுங்கவே.
ஸமுபததத: கஞ்சித் கஞ்சித் ப்ரஸாரயதோ புஜ—
த்வயமபி ஸதா தாநச்ரத்தாளு தீர்க்கமுபாஸ்மஹே. 106

ப்ரதி ஜலதித: கடலுக்கு எதிர் முகமாக
வேலாசய்யாம் { கடற்கரையில் பள்ளி கொண்டதை
விபீஷண கௌது காத் { விபீஷணாழ்வானுடைய குதூஹலத்தினால்
புந: மறுபடியும்
புரஸ்கர்த்தும் இவ { ஆதரித்து அங்கீகரிப்பதற்குப் போலே,

பணி புங்கவே திருவனந்தாழ்வான்மீது
கஞ்சித் (புஜம்) ஒரு திருக்கையை
ஸமுபததத: { தலையணையாகவைத்துக் கொண்டவரும்
கஞ்சித் மற்றொரு திருக்கையை
ப்ரஸாரயத: { நீட்டிக் கொண்டிருப்பவருமான
ஸ்ரீரங்கிண: பெரிய பெருமாளுடைய

# VISHNU TEMPLES
## AND
# THEIR PROPER ADMINISTRATION.

Kancheepuram P. B. ANNANGARACHARIAR.

(Translated by : N. JEYAPPANGAR, B.A.)

According to the Hindu scriptures (Sastras) God, the Almighty, exist, in five forms, namely (1) Parathva (transcendental), (2) Vyuha (causal)s (3) Vibhava (purposive), (4) Antaryamithva (innate), and (5) Archa (physical, in the form of images in temples and houses). Just as God, the supreme object of knowledge (Prameyam) has condescended to exist in these five states to respond to the universality of religious cravings the Veda, the supreme instrument of knowlege (Pramanam) too exists in five ways, namely (1) the Sruthi (Vedas as such), (2) Pancharathra (the Agamas), (3) the Ithihasas (the epics like the Ramayana and the Mahabaratha,) (4) the Smrithis or the Dharma sastras (Law-codes) like those of Manu, Yagnavalkya, etc, and (5) the Prabandams or the immortal inspirations of saints or Alwars so as to be handy to all types of humanity.

The Vedas as such deal with the transcendental state of god as such in His Paramapada or Vaikunta. The Agamas mainly speak of the forms, the qualities and works of God in His causal state (Vyuha Avastha). The Smrithis like those of Manu and Yagnavalkya, which have lay emphasis on our duty to the various presiding deities of nature like Indra, Varuna, Agni, etc., lay stress on His innate presence in them (Vide Gita chap. VII & IX). The Ithihasas and Puranas describe the purpose and work of the incarnations of God (Avatharas) as Rama, Krishna, etc., There is an oft-quoted Sanskrit verse (Veda Vedye pare pumse Jathe Dhasarathathmaje Vede prachedasathaseeth Sakshath Ramayanathmana), which means, "just as God, the supreme Object of worship pointed to by the Vedas, has Himself condescended, in his infinite mercy, to incarnate as the son of Dhasaratha, the infinite, eternal and impersonal Veda itself has condescended to incarnate as an epic with human authorship as the Ramayana of Valmiki. And it is to the benefit of those like us who were not born at the time of His Avatharas (incarnations) that God, in His infinite condescension exists in the form of images in temples, and Prabandams or the divine inspirations of the Dravidian saints (Alwars) essentially emphasize this aspect of His unbounded love and easy accessibility to all mankind at all times and in all places.

We can get at the infinite greatness of God in His transcendental state (Parathva) only through the Vedas. We can know the special qualities of God in His causal state (Vyuha) only through the Pancharatras. We can realise the innate divine essence (Antaryamithva) of the various presiding deities of nature only through the Smrithis. We can understand the purpose and character of His incarnations (Avatharas) only through the Ithihasas and Puranas. And we can get steeped in the glories of His presence in the images of temples, especially those of the well known one hundred and eight holy places known as Dhivya Desas (Sreerangam, Thirumalai, Kanchi etc.,), and His wonderful ways of responding to the devotion of Bhaktas therein, only through the Prabandams or the divine utterances of the Tamil saints known as Alwars (those steeped in the ocean of devotion).

The earliest of the Alwars or the Dravidian saints, by name Poigai Alwar (born at Kanchi) has, for ever, laid the rationale of image-worship thus, "Whatever form His devotees like, that form itself He certainly takes (in His infinite condescension), and by whatsoever name they like to call Him, to that same name He gladly answers......." The divine inspirations of the Dravidian saints, known as the four thousand Tamil songs of the Alwars, express the actual melting of their hearts before the various images of temples. They speak of the universality of divine love in all its various shades and grades and are therefore literally called "the Tamil Vedas". They are the very foundation and form the very essence of Temple-worship and are therefore known as "Archavatara Vedas". So, it is no wonder that these Alwars are popularly known as *Dhivya Suris* or divine-seers, their songs are known as *Dhivya-Prabandams* or divine inspirations and the places sung by them have come to be known as *Dhivya Desas* or divine-spots. The famous Tamil poet, Kambar (who lived in the 9th century A. D.) asks thus in one of his stanzas in "Satakoparanthadi": "Where will all the glories, beauties and the festivities of these temples and their images stand, had not the infinite and eternal Vedas been rendered into easy and sweet Tamil by the Alwars in their universal love ?"

There is not a single Vishnu temple in South India in which the images of Alwars and those of their true followers, the great teachers (Acharyas), have not been installed and worshipped, whereas there is not a single image in any temple to the great Rishis like Valmiki or Vyasa or Parasara who have sung their famous Ithihasas and Puranas. The idols of Alwars and Acharyas have been existing in Vishnu temples from very ancient times. There are plenty of authentic and unquestionable records to show that the images of the saints existed in temples even in Ramanu-

ja's time (1017-1137 A. D.). To give but one example, one of the stanzas of "*Srirangarajastavam*" composed by Battar (contemporary of Ramanuja) refers to the images of the ten Alwars standing installed to the east of the tank called Chandra-Pushkarani in the famous Srirangam temple. In most of the Vishnu temples the festivities of Alwars and Acharyas are observed in a manner even grander than the way in which the festivals of the principal deities themselves are conducted. It is because the divine inspirations of saints (Archavataravedas) are held in very high esteem by Vaishnavites such an important place has been assigned to their authors, viz., the Alwars in their temples.

The elders among Vaishnavites will not enter a temple which has not been sung by an Alwar, or wherein the images of Alwars and Acharyas have not been installed. or wherein their Prabandams are not chanted. The great Vedanta Desika, held in very high esteem by all sections of Vaishnavites, even goes to the extent of saying that one will never attain salvation if one does not learn or get attached to the Prabandams of the Alwars. In one of the stanzas of his "Paduka Sahasram" he says, "Certain it is that God will never grant salvation to those who do not show their devotion or pay homage to the Alwars and their divine songs, but as it cannot be hoped that all will learn Tamil therefor, the principal one among the Alwars, by name Saint Satakopa (Nammalwar), in his all-embracing love for all, has contrived to take his seat and live at the Feet of God in every temple so that all who bow to them or with whose heads His holy Feet are brought into contact (as it is done in South Indian temples) may easily get His grace and be saved!" It is why the holy Feet of God, in every Vaishnavite temple, are known by the name of "Satakopa" only.

Nay, it will not be an exaggeration to say that most of the Deities in Sri Vaishnavite temples have come to be popularly known only by the names which the Alwars have given them in their respective songs. The presiding Deity of Sri Varadaraja Swami temple of Kancheepuram is known in Sri Vaishnavite parlance only as "*Perarulalan*" (The Great Lord of Grace) and this name was given Him only by an Alwar. Similarly the Lord of Thirukudanthai (Kumbakonam) is only known as "*Aravamudu*" (Insatiable Nector) after the name given Him by Saint Satakopa in his stanzas sung in respect of this Deity. We cannot find such a beautiful name mentioned in any other text, Sanskrit or Tamil. Scores of such instances can be cited. The greatness and glories of Sri Vaishnavite temples rest mainly on the Alwars and their inspired songs. The Alwars are the very souls of these temples and the Prabandams are the very breath of their life.

In the circumstances the duties of those who administer the Vaishnavite temples are obvious. There is a tendency in modern days to view even temples as secular institutions and to include in the programme of festivals such items of entertainment as musical concerts, dances, fire works, etc., etc., involving heavy expenditure and to neglect the ancient usages which were intended to maintain the spiritual atmosphere in a very serene and splendid manner. The danger of such degeneracy is the greater since many who are wielding the reins of temple administration happen to be non-Vaishnavites and cannot, therefore, be expected to know the true spirit and significance of these temples as connected with the Alwars. and their Prabandams. It is a pity that in many quarters there is also a growing tendency, and that in modern days with the cry for Tamil everywhere in the air, to show contempt to the Prabandams that they are only Tamil songs and to disrespect the Alwars that they had been only human beings!.

In the past too there mere a few instances of such a hostile tendency growing up among a section of Vaishnavites themselves against the Alwars and their songs and there have been many litigations too in respect of a good number of temples to fix the honours and rights of those who could chant their Prabandams. A few cases have gone up for decision even to the Privy Council. Most of the judgments pronounced in the courts, from the lowest to the highest, will show what pains the Judges took to get at the real truth and spirit of these temples as associated only with the Alwars and their Tamil Prabandams. Even though most of the judges were non-Vaishnavites and even non-Hindus the high offices and positions they held led them to dive at the real truth and not to swerve from the path of justice.

To cite a concrete instance, the history of the litigations of Sri-Varadarajaswami temple, Kancheepuram is a long tale of woe. Till about one hundred years back things were happening in this temple almost satisfactorily, but degeneracy began to set in from the time the administration of the temple passed into the hands of some trustees who had a great prejudice against the Alwars and their songs. There were independent shrines for all the Alwars in this temple and most of them were allowed to fall into ruins. Most of their festivals were stopped and a vehement attempt was made even to hinder the peaceful chanting of their Prabandams both inside the temple and outside it during processions. So, the matter had to be taken to the courts and a long series of litigations and counter litigations were the result. The most important of them, for obvious reasons, was a scheme case to remove the trustees (who began to claim a sort of hereditary right) from the management of the temple. In the end the claim of the trustees to the right of hereditary trusteeship was rejected by

the High court, which ultimately decided that the executive management should be vested in the hands of a common (non-Vaishnavite) Brahmin officer who was to be appointed and controlled in all matters by the Hindu Religious Endowment Board.

Separate suits had to be instituted for the performance of the Alwars' and Acharyas' festivals (which remained stopped for a long time) as they were being done in olden days and it is only for the last six years, that is, after the management of the temple had changed as mentioned above, that things have almost come to their own, so that the institution has, only now, resumed the character of a true Vaishnavite temple. The trustees mentioned above belonged to an illustrious family (Thathachary) and were originally enjoying many rights and privileges not only in this temple but also in almost all Vishnu temples of Kanchi as well as in the temple of Sriperumbudur (the birth place of Ramanuja) and from the moment they began to show their hostile attitude to the Alwars and the true Acharyas, especially Manavalamahamunigal, their rights commenced to dwindle. This is the remark made in one of the judgments of the High Court of Madras in respect of the Sriperumbudur case.* It is this attitude that has ultimately left them bereft of all their rights and privileges in all the other temples and only a few honours are now allowed to be enjoyed by them in Sri Varadaraja Swami Temple.

A close study of the conduct of daily worship and festivals of Sri Varadaraja Swami Temple, Kanchi, would show what amount of priority and predominance has been, from very ancient times, allowed to the Alwars and their Prabandams on all occasions. In no other Vishnu temple such a schematic chanting of the four thousand Prabandams is observed at the time of daily Puja as in this temple. During minor festivals many special honours are shown at the time of commencing the Prabandams. The distribution of Sandal (Chandanam) etc., during the Vasantha Uthsavam is made only on the return of the Deity to the temple from the Hanuman shrine when the chanting of the Prabandams is commenced. A special offering of Pansupari etc., (Surulamudu) is similarly made to the Deity at that time during every Panchaparva festival. During the festival conducted in honour of Saint Andal, in the Tamil month of Margali (Dec.—Jan.) her Purdah is removed as a sign of respect only at the time of commencing the Prabandams on the return journey.

During the grand Brahmothsavam (the annual festival celebrated in the Tamil month of Vaikasi (May-June) for ten days the Deity of Varadharaj

* *Vide Appendix 'A'*

is taken out in procession on a special vehicle (Vahana) both morning and evening on all the ten days to the chanting of appropriate Prabandams. A special feature with this temple is that every vehicle (Vahana) is adapted to the particular portion of the Prabandam to be chanted each time. That is, the vehicle on which the Deity is taken out is only that which is referred to in the part of the Prabandam which is to be chanted during the time. On the morning of the first day there is no vehicle as a mark of respect to the commencement of the Prabandams. In the evening, the first hundred stanzas of Saint Peria Alwar are chanted. Therein the saint accosts God, in one contest, to appear majestically before him as a broad-necked lion. In accordance with this the vehicle of lion (Simma-Vahana) has been fixed by the ancients who were responsible for arranging these festivals. In the portion of the Prabandams that is to be chanted on the morning of the second day there is a reference to God as a bestower of discrimination and the divestor of darkness in the form of the fabulous Swan (Annam-bird, reputed for its keen discrimination) and the vehicle is accordingly the Annam-bird. In the Prabandam to be chanted in the evening of the second day there is a reference to the saint's waking up God from sleep at the time of dawn, and the vehicle of the sun (Soorya-Vahanam) has been accordingly fixed (even though it is the evening time then). On the morning of the third day the Deity is taken out on the famous vehicle of Garuda (the Brahmin-Eagle) This is because the saint concerned wants to bow to the feet of God as He descends from His Heavenly abode flying on the Garuda. (This is the famous Garudothsavam of Kanchi). In the Prabandam to be chanted in the evening there is a reference to Hanuman (the great monkey-ally of Sri Rama) who went as an emissary to Lanka (Cylon) and the vehicle is accordingly Hanuman. (In the original article a detailed explanation for all the other vehicles is given in a very convincing manner and the same is omitted here as a close knowledge of Tamil will be required to understand the full import of the same). It cannot be maintained for a moment that the routine for the chanting of the Prabandams was fixed in accordance with the order of the vehicles then in vogue, for in chanting the Prabandams it is the same routine that is observed in every other Vishnu temple in South India but the order of the vehicles (Vahanas) during the time of the annual festival varies very much in different places. It is only in this temple this close linkage and affinity between the chanting of Prabandams and the order of vehicles can be seen. This can only prove that those who wielded the reins of this temple's administration in the beginning of its history wanted to give first priority to the Alwars' Prabandams in every festival and at every time of worship.

Lord Varadharaja's attachment to the Alwar's Prabandams is a fact proved beyond refutation. It is well known (vide life of Ramanuja) that He was led to lose Sri Ramanuja himself only on account of His extraordinary partiality for and love of Prabandams. [It is said that Lord Ranganatha wanted to take away Ramanuja to Srirangam in order to appoint him as a successor of Alavandar, the great Vaishnava Acharya. A person who could chant the Prabandams sweetly (Araiyar) was sent to Kanchi for the purpose and Lord Varadha was so entranced at the chanting of the songs that He granted Ramanuja as a boon therefor.] Had it not been for Lord Varadha's Sankalpa (strong wish) behind, the Alwars' Prabandams would not have come to stay in this temple in spite of incessant huge obstacles contrived by hostile interests for decades.

Truth is apt to be forgotten often. The weakness of man asserts itself in spite of his best efforts to suppress it. Howsoever this may be in one's personal affairs, those who are placed in the management of important institutions like temples should get abreast of their personal likes and dislikes and try to maintain their true character and unique flavours in every way keeping themselves in the position of important judges and without yielding to be drawn by local party feelings however inviting they may be for the time being.

— —

# APPENDIX

## "A"

19. M. L. J. 957=3 I. C. 123,

Second Civil Appeals No. 952 to 955 of 1905.
November 4, 1908

Present:—Justice Munro & Justice Abdur Rahim.

A. RAGHUNADACHARIAR & others .... Appellants (*Vadagalai*)

*vs*

Thiruvengada Ramanujachariar .... Respondent (*Thenkalai*)

JUDGEMENT:—The object of the Suit was to obtain a declaration of the Plaintiff's right to the office of the 1st Thirthakar with its honours and emoluments and to restrain the defendants from receiving and enjoying those honours and emoluments.

It is however contended by the learned Vakil for the respondent that the facts admitted or found to be proved in this case not only show that the Plaintiffs did not exercise the office of the 1st Thirthakar any time within 12 years of the suit having been excluded thereby the 1st defendant but that the 1st defendant and his predecessor in the office of Jeer held adverse possession of the office of the 1st Thirthakar by enjoing its honours and emoluments for more than 12 years before the institution of the Suit. We think this contention has been made out. It has been found and the finding being one of fact could not be challenged in second appeal that the plaintiffs ever since 1885 have been altogether excluded from the office of first Thirthakar by the defendant who successfully prevented them from exercising any of its functions and enjoying its privileges. We may observe here that the apparent origin of the dispute which led to the dispossession of Thathacharis is that they wrongly insisted on introducing the Vadagalai Mantram into certain Rituals Instead of Thengalai Mantram.

Appeal dismissed.